உ

கணபதி துணை

சைவ—எல்லப்ப நாவலரவர்கள்

இயற்றிய

# திருவருணைக்கலம்பகம்.

இது,

திருவாவடுதுறையாதீன வித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களியற்றிய

குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பிரசுரம்—௬௬

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1921.

உ

திருச்சிற்றம்பலம்.

சைவ - எல்லப்பநாவலரவர்கள்

இயற்றிய

# திருவருணைக்கலம்பகம்.

அருணகிரியை அருணையெனக் கூறியது மரூஉமொழி யென்க. கலம்பகம்—கலவை. கலம்பகமென்னும் பிரபந்தத்திற்குக் கூறிய புய வகுப்பு முதலிய வுறுப்புக்கள் பதினெட்டுடன் பலபாக்களுங் கலப்பாகக் கூறப்படு மியல்பாற் கலம்பகமெனப் பெயராயிற்று.

அப்பதினெட்டுறுப்புக்களும், பலபாக்களுமாவன.

"ஒருபோகுவெண்பாக்கலித்துறையுறமுன்
வருபுயமதங்கம்மானைகாலஞ்
சம்பிரதங்கார்தவங்குறமறம்பாண்
களிசித்திரங்கல்கைக்கிளைதூது
வண்டுதழைமேற்கொண்டெழுமூசன்
மடக்குமருட்பாவஞ்சிவிருத்த
மகவல்கலியினமகவல்விருத்தம்
வஞ்சிவஞ்சித்துறைவெண்டுறைமருவி
யிடையிடைவெண்பாக்கலித்துறைநடைபெற்
றந்தாதிமண்டலித்தாங்கலம்பகமே"

என, இலக்கணவிளக்கப் பொருளதிகாரப் பாட்டியற்சூத்திரத்தா லறிக. இதிற்கூறிய பதினெட்டுறுப்புக்களின் விவரத்தை இந்நூலுள் வருமிடந் தோறுங் கூறிய குறிப்புரையா லுணர்ந்துகொள்க. இந்நூலுட் கூறப் படுஞ் செய்யுட்களிற் பலகவிகள் ஊரிலுள்ளார்முதலியோர் கூறுங் கூற் றாகவுஞ், சிலகவிகள் கவிக்கூற்றாகவுங் கூறப்படு மென்க. இதிற் கூறிய கோவைத்துறைகளன்றி வேறுசில வகப்பொருட்டுறைகளுங் கூறப்படு மென்க.

## காப்பு.

### நேரிசைவெண்பா.

அன்னவயல் சூழருணை யண்ணா மலையார்மேன்
மன்னுங் கலம்பகப்பா மாலைக்குத் — துன்னியசீர்
மெய்க்கோட்டு மேருவெழும் வெள்ளோட்டின் மீதெழுதுங்
கைக்கோட்டு வாரணமே காப்பு. (1)

சீர்மெய்-சிறப்புற்ற வடிவம். கோடு-முன்னது சிகரம், பின்னது கொம்பு. வெள்ளோடு-எழுதப்பட்டில்லாத வெற்றேடென்க. வெண்மையென்னும் பண்பு ஈண்டெழுதப்படாமை என்னு மின்மைகுறித்து நின்றது. இலக்கணக்கொத்து ஒழிபியற் (கஉ) சூத்திரத்தில் ஆகியென்றதனாற்கொள்க. எழுது மென்பதற்குப் பாரதத்தை யெழுதுமென வருவித் துரைக்க.

### கட்டளைக்கலித்துறை.

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமு
முய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த் துணையே. (2)

இல் - இல்லை. வாய்மை - உண்மை. உய்வு - உய்தல். நால்வர் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகர். மூவர்கூறிய திருப்பாடல்களைத் தேவாரமென்றும், மாணிக்கவாசகர்கூறிய திருப்பாடலைத் திருவாசகமென்றுங் கூறுதன் மர பென்க.

## நூல்.

### மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

### எட்டடித்தரவு-1.

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளரு மாதவனு
மணிகொண்ட புண்டரிக மகலாத சதுமுகனு
ஞானக்கண் ணதுகொண்டு நாடுமா றுணராதே
யேனத்தின் வடிவாகி யெகினத்தின் வடிவாகி
யடிதேடி யறிவலென வவனியெலா முழுதிடந்து
முடிதேடி வருவலென மூதண்ட மிசைப்பறந்துங்
காணரிய வொருபொருளாய்க் களங்கமற விளங்குபெருஞ்
சோணகிரி யெனநிறைந்த சுடரொளியாய் நின்றருள்வோய். (1)

## ஈரடித்தாழிசை—7.

மலைமிசையி லிருப்பதற்கோ மலைசிலையா வெடுப்பதற்கோ
மலையரையன் மகிழ்வதற்கோ மலையுருவ மெடுத்தனையே. (1)

இதத்தலத்தி லங்கொழிலு மிருபிறப்போ டறுதொழிலுந்
தத்துவமுந் திருமேனி தரித்திலையோ வியலாவே. (2)

இருக்காதி சதுர்வேத மிசைப்பதுநின் பலபேத
மொருக்கணு மொருவரது தெரிவருமுணர்க்க வறியாரே. (3)

கருமுடிவைத் தந்தோ மரமலர்கள் சடைக்கணிந்தனை
திருமுடியிற் பிறையிருந்த தேபாத வளராதே. (4)

தானவர்பக லழகுநாறு மசுரர்முரசினை பொறிக்குமற்றை
வானவரை யழித்தநின்னை மழுப்படையாய் மறுங்காதே. (5)

அண்டமுகத்து முனிவரர்க்கு மரிதான கொடுவிடத்தைக்
கண்டமடக் கிக்கொண்டது கண்டமட்டுமே கடவாதே. (6)

மூவாமை தனக்குநின்றாரு முதனாவி லிலாதமைக்குஞ்
சாவாமை பிறவாமை தமக்குநின்னை சார்வரன்றே (7)

## நாற்சீரோரடியிரண்டுகொண்ட அமபோதரங்கம்—2.

தடவரை நடைகெழு தரமென வருமொரு
கடகரி யுரிவிரி கலையென மருவினை. (1)

படமுடை யரவொடு பகைபடு முடுபதி
தடையற வுடனுறை சடைநெடு முடியினை. (2)

## முச்சீரோரடி அமபோதரங்கம்—4.

சிலையென மலையை வளைத்தனை. (1)

திரிபுர மெரிய நகைத்தனை. (2)

கலைமறை யிகுளி படைத்தனை. (3)

கதிரவ னெயிறு புடைத்தனை. (4)

## இருசீரோரடி அம்போதரங்கம்–௮.

விதி சிரத்தினை (1) நதி தரித்தனை (5)

அகழ் காத்தினை (2) மதி பரித்தனை (6)

விடை நடத்தினை (3) நாளக னாயினை (7)

பொது நடத்தினை (1) சோமக னாயினை. (8)

## பெயர்த்தும் ஈரடித்தாழிசை–3.

பண்ணுநீ சுவையுநீ பரிதியுநீ பனிக்கதிர்நீ
பெண்ணுநீ யாணுநீ பேதமுநீ யபேதமுநீ (1)

செங்காலிற் கருங்காலன் சிரமுருள வுதைத்தனையே
சங்காழி முகுந்தனுக்குச் சயங்காழி கொடுத்தனையே. (2)

ஆறாலு மளவிடுதற் கரியவுனை யொருகாதலு
நீறாலு மலராலு நெஞ்சுருகப் பணலாமே. (3)

## தனிச்சொல்.

எனவாங்கு.

## நேரிசை ஆசிரியச் சுரிதகம்.

வேற்று மருந்தால் விடாதவெம் பிறவியை
மாற்று மருந்தா மலைமேன் மருந்தா
வழங்கிய நாயகி யருளுடை நாயகி
புழுகணி நாயகி பொருந்திய பங்கா
காசியி லிறந்துங் கமலையிற் பிறந்தும்
தேசமர் தில்லையுட் டிருநடங் கண்டும்
மரிதினிற் பெறும்பே றருணையை நினைப்பவர்க்
கருதினர்க் களிக்கு மருணையை விரும்பி
யடைக்கலம் புகுந்தன னடியே
னிடர்க்கடல் புகாநெறி தந்தரு ளெனவே. (1)

அடிமுடிதேடிய கதை—அருணாசலபுராணம் திருமலைச்சருக்கத்திலறிக. மலையுருவம் - அருணாசலவடிவம். ஐந்தொழில் - சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம். அறுதொழில் - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். தத்துவம் - அகக்கருவி முப்பத்தொன்று, புறக்கருவி யறுபதுமாகிய தொண்ணூற்றாறு. சதுர்வேதம்—இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம்.

DR. U.V.S. IYER LIBRARY MAHAMAHOPADHYAYA BESANT NAGAR, MADRAS-90

### நேரிசைவெண்பா.

வேதநுவல் சோணகிரி வித்தகர்க்கார் வேறுவார்
சோதியிய மானனிவர் சோமனிவ—ராதவனும்
மண்ணுங்கா லும்புனலும் வானுமழ லுமிவ
ரெண்ணுங்கா லெல்லா மிவர். (2)

இயமானன்—ஆன்மா. சோமன்—சந்திரன். ஆதவன்—சூரியன். கால்—காற்று. இக் கவியிற் சிவபிரானுடைய அட்டமூர்த்தத்தைக் கூறியது காண்க.

### கட்டளைக்கலித்துறை.

எல்லா வுயிர்க்கு முயிரரு ணேச ரிறையசைவி
னல்லா தணுவு மசையாத தென்ப தறிந்தனமே
வில்லாடன் மார னிருக்கவும் யோகம் விளைத்தவந்நாட்
புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே. (3)

முன்னடியில், 'அவனசையாம லணுவசையா'தென்னும் பழமொழியைக் கூறினா ரென்க. வில்லாடன்மாரன்—கருப்புவில்லால் வெற்றிகொள்ளு மதன். இருக்கவும்—உயிரோடிருக்கவும். யோகம்விளைத்தவந்நாள்—(சிவபிரான் கைலையிற் சனகாதி[illegible]கல்லாலின்கீழிருந்து) யோகத்தை யுண்டாக்கிய வக்காலத்தி[illegible] சுத்தமாயா சொரூபமென்பர். புல்லாது—பொருந் தாது [illegible] யோகியாயும் போகியாயுமிருத்தலால், உலகிலே யோகமும் [illegible]கழ்வ[illegible]தன் றறிக. சிவஞானசித்தியார் (க-ம்) சூத்திரம் (ருO-வது) [illegible]லறிக.

### கலித்துறை.

போகம் விடுத்தே தாக மெடுத்தே புவிமீதே
யோகம் விளைத்தே யாக மிளைத்தே யுழல்வீர்கா
ளாகம வித்தார் மோக மவித்தா ரருணேசர்
சோக னகத்தா னாக நினைத்தே குழைவீரே. (1)

ஆகமவித்தார்—சிவாகமங்களையருளிய மூலமாயுள்ளவர். ஆகம்—முன்னது உடம்பு, பின்னது மனம்.

### அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

குழைபடுத்த விழியிடத்தர் மழுவலத்த ரருணையந்தர்
குளிர்வெற் பூடே
மழையெடுத்த துளிகளைக்க மடிசுருக்கி மயிர்பொடித்து
வருந்துஞ் சேதா

தழையுடுத்த விடையர்பற்று குழலிசைக்கு மனமுருக்கித்
தளரு மாலை
பிழையடுத்த மொழியுரைத்த தலைவருக்கு மிகவிரக்கம்
பிறப்பி யாதே. (5)

மடி—முலைமடி. மயிர்பொடித்து—உரோமம் புளகமுற்று. சேதா—சிவந்த பசு. பிழையடுத்தமொழி—வருவோமென்றநாளிற் றலைவர் வாராமையால் அவர் கூறிய மொழியைப் பிழையடுத்தமொழி யென்றாள்.

## எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

யாதவர் குலத்துநெடு மாதவன் மருப்புடைய
வேன மிருகந் துருவமாய்
வேதமொழி பெற்றவய னோதிம மெனப்பறவை
வேடமு மெடுத்த திலையோ
வோதருணை விந்தகரை மூவரி லொருத்தரென
வோதியிடு மற்ப மதியீர்
சீதமதி வைத்தமுடி பாதமல ரைச்சிறிது
தேடுத னினைத்த பரமே. (6)

அபரமே-பின்னை. "அபரமேயெடுத்ததிலையோ"வெனக் கூட்டுக.

## எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பாவை யடினு நதிக ளாடினும்
படியெ லாநடந் தடிக டேயினுங்
குரவ ராயினுங் கனலி னின்றுதன்
கொதிபொ றுக்கினுங் கதிகி டைக்குமோ
வரவ மாடுசெஞ் சடில ரங்கணா
ரமுதர் தாணிணைத் தடிய ரும்மொடு
விரவி நீறணிந் தருணை சேர்வரேல்
வெற்ற ராயினு முத்த ராவரே. (7)

குரவர்—குருத்தன்மையுடையவர். வெற்றா—ஒன்றுமில்லாதவர்.

## பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முத்தமிழ்முறைமுறையன்பொடு
மப்பர்கவுணியர்சொல்சுந்தரர்
முப்பொழுதுமெதிர்புகழ்ந்திடு முதுநூலா

ரத்நாருணையினெடுந்திரை
தத்து திருநதியின்மென்பெடை
யச்சமறவுடனணைந்துறை                மடநாரா
யொத்தமனதொடுபுணர்ந்தவர்
சற்றுமகல்வதிலையென்றவ
ருற்றதுணைபெனவிருந்தவ                ருளம்வேறு
மொத்தனைகபடநினைந்தவர்
கைப்பொருள்கருதிகடந்தனை
ரெப்படியிறைவனைநம்புவ                றினநாமே. (8)

முத்தமிழ்—இயல், இசை, நாடகம். இறைவரை—இறையளவு.

## அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இனமகலு மருகர்மட மிசையிலிடு கனலமது வை
யிறைவனுடல் புகமொழிபவரே
கனகமுக படகவள கரடதட விகடமத
கரியின்மத மறநினைவரே
வனமருவு மருமுதலை பொருமதலை தரவினிய
மதுரகவி மொழிமுதல்வரே
யனகாபி நயாதுல மலமொற தருணகிரி வளர்
யடிகடம தடியவர்களே. (9)

சமணர், தம்மடத்திலிட்ட தீப் பாண்டியனைப் பற்றும்படிசெய்தவர் சம்பந்தமூர்த்திநாயனார். சமணர் தம்மைக்கொல்லவிட்ட யானை மதமற்றுவணங்கிப் போகச் செய்தவர் திருநாவுக்கரசுநாயனார். கனல்—தீ. மதலை—பிள்ளை. முதலையுண்ட பிள்ளையைக் கரையிற்சேர்க்கும்படி செய்தவர் சுந்தரமூர்த்திநாயனார். அதுலர்—ஒப்பில்லாதவர்.

## தலைவன்வினவுதல்.

## எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அடியவர் சிந்தையி லினிதுறை சங்க
ரருணையெம் பதியன்றோ
படியினி லுங்கரி யனையம தங்கொடு
பதறிந டந்திடு மின்றோ

23474



பொடியு மருங்கென வுணர்கிலிர் நின்றினி
யொருவச னஞ்சொல வொண்ணுதோ
கடியச ரங்களி னிளைஞ ருடன்பல
கலகவி தம்பயில் கண்ணரே. (10)

மருங்கு—இடை. சரம்—பாணம் இக்கவி, தலைமகளை முன்னிலையாக்கித் தலைமகன் வினவிய தென்க.

அம்மானை.

மடக்குத்தாழிசை.

நாரா யணனறியா நாதரரு ணாசலர்க்கு
வாரார் சிலைகலைமெய் மாதங்க மம்மானை
வாரார் சிலைகலைமெய் மாதங்க மாமாயி
னோராயுங் காலெவர்க்கு மன்னமன்றோ வம்மானை
பன்னமறி பாரெரிப்ப ரையமே தானம்மானை. (11)

வார—பெருமை. சிலைகலைமெய்மாதங்கம்—சிலை-வில். கலை—ஆடை. மெய்—சரீரம். இம்மூன்றும் மாதங்கமென்க. முறையே, மா தங்கம் எனவும், மாதங்கம (யானைத்)தோல் எனவும், மாது அங்கமெனவும் பிரித்துப் பொருள் கொள்க ஐயம்—முன்னது பிச்சை, பின்னது சந்தேகம். அன்னமென்பதற்குப் பிரமனாகிய அன்னமெனவும், சோறாகிய அன்னமெனவு மிருபொருள் கொள்க. அம்மானை என்பது மகளிர்கள் அம்மனையாடும்போது பாடுவதாகக் கருதிக் கவி கூறுவது; இது, மூவர்கூற்றாகக் கூறுவர்.

பாங்கி தலைவியை வினாதல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மானென்பார் கலையென் பார்கைம்
மலையென்பார் வழியே தென்பா
ரேனென்பா ரிலையென் பார்யா
னேந்துமாந் தழைநன் றென்பா
ரூனென்பார் நிறையுந் தாரா
ருறையுந்தென் னருணை மானே
கானென்பார் குழலை வேந்தர்
கருத்தென்னோ கருதுங் காலே. (12)

ஊனென்பார்நிறையுந்தாரார்—ஊன்பொருந்திய என்பும், ஆத்திப்பூவுநிறைந் திருக்கு மாலையுமுடையவர். குழலை—நின் கூந்தலை. கானென்பார்—சோலை யென்பார்; கானலென்பது கான் எனக் குறைந்துநின்றது. இக்கவி, தலைமகளும்

பாங்கியு முடனிருக்கும்போது, தலைவன் றழைகொண்டுவந்துநின்று மான் முதலியன வந்தனவோ? வென்று வினவியதறிந்த தோழி, இவ் வேந்தர் பல விதமாகக் கூறலால் இவர் கருத்தியாதோ வெனத் தலைவியை வினவியதாகக் கூறிய தென்க.

## புயவகுப்பு.

### ஆசிரியவண்ணவிருத்தம்.

கருணைமுக மண்டலத் தொளிர்மகர குண்டலக்
கலன்மலிக வின்குழைக் குறுவாயிலை சந்தன
களபமகில் குங்குமத் தமராகுழ கொண்ட ரொட்
டியபுழுக ணைந்து மெப்ப பனிரீது லாந்தன
கலைமதிப ழங்கிரத் தினமிருவ மைந்து முத
தொளிகருக வெண்கவைத் திருநீறணிந்தன
கனவிகைய ரிந்துகட் பரிதியை முரிந்துதக்
கனைமுடித டிந்துமைத் தலையேவழங்கின

விரணியனு ரங்கிழித் தளவறுபு தங்கொழித்
தெழுநரம டங்கலைத் தட மார்பிடந்தன
விமயமட மங்கைபொற் புளகவிரு கொங்கையிற்
சுவடுபட வின்பமுற் றநிலைகுழைந்தன
விரவிகிர ணங்கொழித் ததிசயமு டன்கிளைத்
தெழுபவள வன்பொருப் பெனவேவளர்ந்தன
விதழியர விந்தமுற் பலமகிழ்செ ருந்திகட்
குரவலரி சண்பகத் தொடையாணிறைந்தன

தரியலர்பு ரங்கெடச் சுரர்நரர்ப யங்கெடத்
தமனியநெ டுஞ்சிலைச் சிலைநாணெறிந்தன
தனுவலத கஞ்செயற் கமர்பொருச ரந்தரச்
சாதமென வந்துமற் பொருபோர்புரிந்தன
சலசமலர் மண்டபச் சதுமுகவ யன்றிருத்
தலையுடனி லங்குமுத் தலைவேலுவந்தன
தடவிகட கும்பமத் தகதவள தந்தநற்
றறுகண்மத குஞ்சரத் துரிபோர்வைகொண்டன

வருணகிர ணங்களிற் பலமணிநெ ருங்கிநச்
சரவுமிளிர் கங்கணப் பணியான்மலிந்தன
வனவரத மம்பலத் தினினடமி டுந்தொழிற்
கபிநபவி தங்கள்பெற் றழகோடிருந்தன
வருமறைதெ ரிந்தசொற் புகலியிறை செந்தமிழ்க்
கரசினொடு சுந்தரப் பெருமாள்புகழ்ந்தன
விரிபிரமர் தங்களுக் கரியபத பங்கயத்
தருணையதி ருங்கழற் பெருமாள்புயங்களே. (13)

சுவாமியின் திருப்புயங்களின் பெருமையின் பகுப்பைக் கூறியவதனாற் புயவகுப்பெனப் பெயராயிற்று. குண்டலக்கலனாகிய குழையென்க. கலன்—ஆபரணம். அளறு—சேறு. கனலி—அக்கினி. பரிதி—சூரியன். மைத்தலை—ஆட்டுத்தலை. தக்கன் யாகசங்காரத்தில், அங்கிகியின் கையறுத்துச், சூரியனைக்கோபித்துத், தக்கன்றலையரிந்து ஆட்டுத்தலை கொடுத்ததைக் குறித்துரைத்தாரென்க. அரவிந்தம்—தாமரை. உற்பலம்—நீலோற்பலம். மகிழ்—மகிழம்பூ. செருந்தி-செருந்திப்பூ. குரவு-குராப்பூ. முத்தலைவேல்—சூலம். அருணம்—சிவப்பு. புகலியிறை—சீகாழித்தலைவராய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

## தலைவனைவேண்டல்.

### மடக்கு—எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

புயந்தழுவுங் கண்ணியுஞ்செவ் விதழி யேமால்
பூண்டகயற் கண்ணியுஞ்செவ் விதழி யேமால்
வியந்துசொலி னன்னதும்பொன் னிறமே யெங்கண்
மின்னிறமும் பொன்னிறமே புயம்பெ றும
லயர்ந்திவள்வா டத்தகுமோ வருட்கண் பாரீ
ரருணகிரிப் பெரியீரே யமல ரேநல்
வயந்தவிழா வழகரே நினைக்க முத்தி
வரந்தருவா ரேமலைமேன் மருந்த னாரே. (14)

இதழி—கொன்றைப்பூ. மால்—மயக்கம். செவ்விதழி—செம்மையாகிய விதழினையுடையாள். மால்—பெருமை. அன்னதும்—அத்தன்மையுடையதாகிய கொன்றைப்பூவும். மின் என்றது தலைவியை. பொன்னிறமேயென்றது காமமயக்கத்தாற் பசலைபூத் திருத்தலாற் பொன்னிறமே யென்க. வசந்தோற்சவத்திலே மிக்க வழகுடையவராகத் திருக்கோலங்கொண்டிருத்தலால், வயந்தவிழாவழகரெனக் கூறியதென்க; இதனைப் பின்னர்ச் சிலகவிகளி லெடுத்துக்கூறுமாறு காண்க.

இரங்கல்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மலைமேன் மருந்த ரருணேச ரன்று வலைவீசி நின்ற வலையே
யலைமே னிறைந்து வருமீ னருந்தி யருகே யிடங்கொள் குருகே
மூலைமேன் முயங்கு தலைநாளி லன்பர் மொழிசூண் மறந்த பிழையோ
தலைமேல் வரைந்த படியோ விருந்து தரியேன் வருந்து தகவே. (15)

அருணேசர் வலைவீசியகதை, திருவிளையாடற்புராணத்தில் வலைவீசிய படலத்திற் காண்க. அலை—கடலே. குருகு—பறவை. மொழிசூள்—தலைவர் நின்னைப் பிரியேனென் றுரைத்த சத்தியம்.

தலைவியைப் புகழ்தல்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தகன முறுமவலின் மதனை முனிபவர் சடையி லணிபல தலையினு
ரகன லடியரொ டுறையு மிறையவ ரருணை வளநக ரரிவையார்
நிகரி றனதட வமுத நிறைகுட நிலவு முகபடம் விலகினுற்
ககன வமரரு நரரு மிகல்கொடு கலக மிடுவரிவ் வுலகிலே. (16)

அலின் மதன்—அல்லினையுடைய மன்மதன். அல்—இருள். அரிவையார் என்றது தலைவியை. தடம்—பெருமை. குடம் என்றது முலையினை. படம்—ஆடை. ககனம்—விண். அமரர் அமுதநிறைகுடமாணதா லெங்கட்கே யுரித் தென் றுலகிற் கலகமிடுவ ரென்க.

இதுவுமது.

மடக்கு—எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உலககண் டகனுய் வருசலந் தரனு
றுடறடிந் திடுவார் கடல்விடங் கொளுவார்
குலவுசங் கரனு ரருணையங் கிரிசூழ்
குளிர்புனந் தனிலே யிளிகடிந் திடுவார்
மலர்முகஞ் சசியே வடிவமுஞ் சசியே
மகரமென் குழையே வருணமென் குழையே
முலையுமந் தரமே யிடையுமந் தரமே
மொழியுமா சுகமே விழியுமா சுகமே. (17)

கண்டகன்—துட்டன். சலந்தரன்—ஓரசுரன். சசி—முன்னது சந்திரன், பின்னது இந்திராணி. மகரமென்குழை—மகரமீன்வடிவமாகிய ஓர் காதணி. வருணமென்குழை—நிறமானது மெல்லியதளிர். மந்தரம்—ஓர்மலை. அந்தரம்—ஆகாயம். மாசுகம்—பெருமையுடைய கிளிமொழி. ஆசுகம்—பாணம்.

இரங்கல்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சுகமே சுகமே யிரும்வந் துபுனஞ்
சூழ்கின் றவுமைத் தினமித் தினையுட்
புகமே யவிடா துகடிந் திடுமெம்
பொல்லா மையுமின் றுபொறுத் திடுமின்
மகமே ருநெடுஞ் சிலையா ளருணை
மலையா ரருணை புரிமால் வரைமே
லகமே செலுமா றுதுணிந் திதண்விட்
டகறுன் பமுமன் பர்வரிற் சொலுமே. (18)

சுகமே—கிளிகளே. அருணைபுரி—அருணைநகர். அகம்—எம்முடைய இல்லில். இதண்—பரண். அன்பர்—நாயகர். இக்கவி, தினையறுத்தமையால் இதண்விட்டில்லிற்குச் செல்லுந் தலைவி பரிந்து தலைவற்குப் பிரிவுணர்த்தக் கூறிய தென்க.

இதுவுமது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சொல்லா ரணத்திற் கறிவரியார்
சோணா சலத்திற் சுகங்கடமைக்
கல்லா லெறிந்த பகைக்குவழி
காட்டா தொழிதல் கண்டாயே
கொல்லா வம்புஞ் சமர்க்களத்திற்
குனியா வில்லுங் கொண்டுநிற்கும்
புல்லா டவனே யெமக்குறுதி
புகன்று ரெய்கே யகன்றாரே. (19)

பகைக்கு-விரோதத்தின்பொருட்டு. வழி-தலைவர்போன வழி. புல்லாடவன் என்றது தினைப்புனத்தில் ஆண்மகன்வடிவமாகப் புல்லினாற் செய்யப்பட்டு வில்லு மம்பும் ஏந்திநிற்கும் வடிவத்தை யென்க.

பிரிவுவிலக்கல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆரும் விரும்பிய கல்விமே லாசையு டக்குள தாயிடிற்
பாருற வென்பொரு பாவைபாப் பாடிய பாவலர் போலவே
நீருமொ ருந்தமிழ் செப்பிடு நீர்மைய றிந்திவ ணேகுவீர்
மேருநெ டுஞ்சிலை யத்தனார் வீற்றரு ணைபுரி வெற்பரே. (20)

இக்கவி, தலைவர் கல்விகற்குமாறு பிரியுங்காற் றலைவிவிலக்காகக் கூறியது. பாடியபாவலர்—சம்பந்தமூர்த்திநாயனார். பாவை என்ற தீண் டுவமையாகுபெய ராய்ப் பெண்ணையுணர்த்தி நின்றது

என்பைப் பெண்ணுருவாக்கிய வரலாறு. மயிலாபுரிபபதியிற் சிவநேசச் செட்டியாரென்பவர் பூம்பாவையென்னுந் தம புத்திரியைச் சம்பந்தமூர்த்தி நாய னாருக்குக் கொடுப்பதாகக் கருதி வளர்த்து வைத்திருந்தார். பின்பு அப் புத்திரி மலர்கொய்தபோது பாம்பு கடிக்க விறந்தாள். செட்டியார் அபபுத்திரி யெலும் பைக் குடத்தி லடிக்கிவைத்திருந்து நாயனார் அங்கே வரும்போது தேவரீர்க்கு வைத்திருந்தவள் என்பாகி யிருக்கின்றாளென்று கூற, நாயனார் ஆலயவாயிற் கொண்டுவரச்சொல்லி யங்கு வைத்து "மட்டிட்டபுன்னை"யென்னு முதற்குறிப் புள்ள பதிகத்தைப் பாடியருளப பழைய பெண்ணுருவமாயினது; என்பதாம். தமிழ்செப்பிடுநீர்மை—உமதுபிரிவால் யான் இறநதென்பாகுவேன் என்னைப் பெண்ணுருவமாகச் செய்யுந் தமிழ்க்கவி சொல்லுந் தன்மையென வருவித் துரைக்க.

காலம்.

மடக்கு—எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம.

வெற்றிமதன் போர்க்காயம் பிறைக்குங் காலம்
வெங்கனலே போற்காயும் பிறைக்குங் காலஞ்
சுற்றுமிரு கரமென்னே சங்கணியாக் காலந்
தலைவர்துறை மறந்தென்னே சங்கணியாக் காலங்
கற்றைநெடுஞ் சடைமுடியா ரடியார்மேன் முழுதுங்
கருணைநாட் டம்புரியு மருணைநாட் டுறையும்
பெற்றவிளந் தென்றன்மறு கிடத்தியங்குங் காலம்
பேதையேன் சிந்தைமறு கிடத்தியங்குங் காலம். (21)

அம்பிறைக்கும்—அம்பாகியபூக்களைச் சிதறும். காயம் - ஆகாயம். பிறை—துறைமதி. சங்கு—வளையல். துறை—இடம். என்னேசங்கணியாக்காலம்—என்

னுடைய அன்பைக் கணியாதகாலம். மறுகிடத்தியங்கும்—வீதியினிடத்துச் சஞ்சரிக்கும். மறுகிட—சுழல. இக்கவி, தலைவரைப்பிரிந்த தலைவி கார்காலமுதலிய காலங்கண்டு வருந்திக்கூறுவதாகக் கூறியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

காலிற் றுலங்கு நகத்தானுங்
கையிற் பொலிகூர் நகத்தானுஞ்
சீலத் தரக்க னுரங்கொண்டீர்
திசைமா முகனைச் சிரங்கொண்டீர்
மேலைப் புரத்தை நகைத்தெரித்தீர்
வில்வேள் புரத்தைப் விழித்தெரித்தீர்
சூலப் படையேன் மழுப்படையேன்
சுமந்தி ரருணை யமர்ந்தீரே. (22)

அரக்கன்—கைலைமலையைப் பெயர்த்தெடுத்த இராவணன் புரம்—முன்னது திரிபுரம், பின்னது—உடம்பு. சூலமு மழுவும் வீரத்தன்மைக் கடையாளமாகக் கொண்டாரென்க. திருவானைக்காப்புராணம் நகரப்படலம் (௬௫-ம்) கவியிற் கூறுமாறு காண்க.

மாலையிரத்தல்.

மடக்கு—அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அமர்ந்தரு ணைப்பதி வாழ்வீரே
யன்பர்க ளன்பினி லாழ்வீரே
சுமந்தொளிர் சூலமெ டுப்பீரே
தோளணி மாலைகொ டுப்பீரே
இமந்தரு வெண்மதி காயாதே
யிருகணை யம்புனல் பாயாதே
கமழ்ந்தகு ழற்கொடி வாடாதே
கங்குலு மிப்படி நீடாதே. (23)

குழற்கொடி என்றது தலைவியை.

ஒன்பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நீடாழி ஞாலம் வானொடு திகாலு லாவுமி யாவையு
நீறுய காலமாய் விடுநாள்
கோடாழி மால்பி தாமக னாருன கோடி வீழ்தலை
கோமர டாரமீ துறவே

சூடாத மாலை சூடுவர் தோளோடு தோளை வீசுவர்
சோணாச லேசர்சோ பனமா
வாடாத வாட லாடுவர் பாடாத பாடல் பாடுவ
ராராத வேட்கைகூ ருவரே. (24)

ஆழி—முன்னது கடல், பின்னது சக்கரம். நாள்—ஈண்டுச் சர்வசங்காரகாலமென்க. கோடு—சங்கு. பிதாமகன்—பிரமன். கோடீரம்—சடை. சூடாதமாலை—என்புமாலை. ஆடாதவாடல்—(வேறொருவரும்) ஆடாத பாண்டரங்கமுதலிய கூத்து. பாடாதபாடல்—சாமகானப் பாட்டு. ஆராத—அடங்காத.

புன்னாகங்கண்டிரங்கல்.

## கலித்துறை.

கூத்தாடி மருணேசர் வரையன்பர் பொருளன்பு கொண்டென்னையு
நீத்தார்கொ னிழலாரு மிலையாகி நின்றாய் நெடுங்காலமே
பார்த்தாலு மயலே கிளைத்தாய் சலித்தாய் பசுந்தென்றலாற்
பூத்தாய்பொன் னிறமாக வென்னைப் போலவே புன்னாகமே. (25)

பொருள்வயிற்பிரிந்த தலைவரைக்குறித்துத் தலைவி யிரங்கிக் கூறினமையாற் "பொருளன்புகொண்டென்னையுநீத்தார்கொ" லென்றாள். தலைவியைக்குறிக்கும்போது "நானுநிழலாருமிலையாகிநின்றே"னென்றும், "மயலேகிளைத்தே" னென்றும், "சலித்தே"னென்றும், "தென்றலாற்பொன்னிறமாகப்பூத்தே" னென்றும் எடுத்துரைத்துக்கொள்க. இப்பொருட்கு, நிழல்—தஞ்சம். ஆருமிலை—யாவருமில்லை. மயலேகிளைத்தேன்—மயக்கமே பெருகினேன். சலித்தேன்—இளைத்தேன். பொன்னிறம்—பசலையென்க. புன்னாகம்—புன்னைமரம். நிழலாருமிலை—நிழனிறைந்திருக்கும் இலை. அயலேகிளைத்தல்—பக்கமே கிளைகள் விடுதல். சலித்தல்—அசைதல் என்க.

இரங்கல்,

## மடக்கு—அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நாரமெ டுத்தவ ரப்பானார்
நாலும றைக்குவ ரம்பானார்
தோகையி டத்தவர் சேனாராய்
சோணகி ரிப்பதி வானாராய்
மாகமெ டுத்தவி ளங்காவே
மன்னவ ரெண்ணம்வி ளங்காவே
கோகன கத்திமி ருந்தேனே
கொண்கனை விட்டுமி ருந்தேனே. (26)

நாகமெடுத்தவர்—சேடனாகிய நாகத்தாற் றாங்கப்பெற்ற திருமால். வரம்பு—எல்லை. தோகை—மயிலாகிய உமாதேவி. சேணாராய்—வானோ ராராய்கின்ற. வாணாராய்—வாழ்கின்ற நாரையே. மாகம்—ஆகாயம். எண்ணம்—எண்ணுங் குறிப்புக்கள். கோகனகத்திமிருந்தேனே—தாமரைமலரிடத்து முழங்கும் வண்டே. இருந்தே னென்பதற்கு இறவாம லுயிரோடிருந்தேன் என வுரைக்க.

ஊசல்.

## மடக்கு—எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இருசரணச் சிலம்பாட வாடி ரூச
 லிளமுலைப்பொற் சிலம்பாட வாடி ரூசன்
மருவுகலை மருங்கசைய வாடி ரூசல்
 வரிவளைக்கை மருங்கசைய வாடி ரூச
லருமறைக ளளவிடுதற் கரிதா மைய
 னருணகிரிப் பாமர்புக ழடைவே பாடிப்
பொருமிருகட் கயலுலவ வாடி ரூசல்
 புயமதனன் கயலுலவ வாடி ரூசல். (27)

பொற்சிலம்பு—அழகியமலை. கலை—ஆடை. மருங்கு—முன்னது இடை; பின்னது பக்கம். அடை—முறை. கயல்—பின்னது மீனக்கொடி. இக்கவி, தலைமகளிர் ஊஞ்சலிலிருக்க அவ்வூஞ்சலாட்டு மகளிர் பாடுவதாகக் கூறிய தென்க.

பாங்கி சொல்லுதல்.

## எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஊசலு கைத்திடுவார் குன்றெதிர் கூவிடுவா
 ரொண்டா ளங்கொளுவார் தண்டலை கொய்திடுவா
ரசில்பு னற்குடைவா ரம்மனை பந்துகழங்
 காடிம கிழ்ந்திடுவார் கோடிம டந்தையரே
யீசர்வி டைக்கொடியார் பூசைசெ யற்கெளியா
 ரோரரு ணைப்பதிசூழ் மேருவி னிற்கவணே
வீசுதி னைப்புனமே யாவரெ னத்தெளியேம்
 வேலர்ம னத்திடையே மாலைவி ளைத்தவரே. (28)

மேருவினில்—மேருமலையினில். கவணே என்பதில் ஏ அசை. வேலராகிய தலைவரே இத்தினைப்புனத்திற் கோடி மடந்தையருள்ளார் நும்மனத்தில் மயக்கத்தை விளைத்தவர் யாவரெனத் தெளியேம் கூறுவீரெனப் பாங்கிகூறினா ளென்க.

## மடக்கு—கலிவிருத்தம்.

மாலையென்பாங் கலத்தாரு மறைநாறுங் கலத்தாருங்
கோலமன்ன கலத்தாருங் குறைவில்பரி கலத்தாரு
மாலைவில்வேள் சலத்தாரு மதர்த்தமதா சலத்தாரு
மேலகலாச் சலத்தாரும் விளங்கருணை சலத்தாரே. (29)

என்பாங்கலம்—எலும்பாகிய ஆபரணம் மறைநாறுங்கலம் என்றதனுற பிரமகபாலமாகிய பாத்திரம். கோலமன்னகலம்—பன்றிக்கொம்புமன்னிய மார்பு. கோலம்—ஆகுபெயர். குறைவில்பரிகலம்—அக்ஷயபாத்திரம். பெரியோருண் கலத்தைப் பரிகலமென்பது மரபு. சலம்—கோபம். மதர்த்த—களிப்புற்ற. மதாசலம்—யானை; ஈண்டு அயிராவணமென்னும் யானையென்க. அகலாச்சலம்—நீங்காத கங்கைநீர்.

தலைவியைப்புகழ்தல்.

## அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அருணையொளி தனிலுமொளி ரருமலைம ருந்தாய
வமலரதி ருங்கழலினார்
மருமலர் விரிந்துநதி பெருகருணை யம்பதியின்
மருவிய மடநதையிடையா
மொருகொடியி லொன்றுகமு கொருபவள மொன்றுகுமி
ழொருமதிய மொன்றுபிறைதா
னிருசிலையி ரண்டுகணை யிருபணையி ரண்டுகுழை
யிருமுலையி ரண்டுமலையே. (30)

கமுகு, பவளம், குமிழ், மதியம், பிறை, சிலை, கணை, பணை, (மூங்கில்) குழை, (காதணி) ஆகிய இவற்றை முறையே கழுத்து, உதடு, நாசி. முகம், நெற்றி, புருவம், விழி, தோள், காது ஆகக்கொள்க. இஃதோர் திப்பியக்கொடியாயிருக்கின்றதெனத் தலைவன் புகழ்ந்தானென்க.

தலைமகன் றன்னைத்தானே புகழ்தல்.

## எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மலையாச னத்தர்மலை மயிலாச னத்தரெழு
மலையா னிலத்து வருவா
ரலையாச னத்தரொடு மயிர்தாச னத்தர்தொழு
மருணாச லத்தர் வரையீர்

23474
(ஏ௰)
DR. U. V. S. IYER LIBRARY
MAHAMAHOPADHYAYA
BESANT NAGAR, MADRAS-90



முலையானை கட்டியிடை வெளிதோர்ந் ...
முகமா யமைத் தருகுலா
மிலைவேல்ப ரப்பியினி தெழுதோள மைப்பனினி
யெழுதேனி ருப்பு மனமே. (31)

இக்கவி, தலைமக ளவயவத் தருமை சாற்றி யெழுதமுடியாதென்ற தோழிக்கு எழுதமுடியுமெனத் தலைமகன் தன்னைத்தானே புகழ்ந் துரைத்ததாகக் கூறிய தென்க. மலையாசனத்தார்-போர்செய்யாதபோர்க்கு ஆயத்தமாயிருப்பவர். ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மலையாச்சனத்தர் என்று கூறற்பாலதை மலையாசனத்தர் எனச் சகரவொற்றைத் தொகுத்தலாக்கி யுரைத்தாரென்க. சன்னத்தரென்றது சனத்தரென நின்றது. மலைமயிலாசனத்தர்-உமாதேவியின் சிரிப்பை நத்துதலையுடையார். ஆசம்-சிரிப்பு. நத்தல்-விரும்பல். எழுமலையானிலத்துவருவார்-எழுகின்ற வலியுடைய அழகிய இடபத்திடத்தினில் வருபவர். மல்-வலி. ஐ-அழகு. இல்-இடம். அலையாசனத்தார்-பாற்கடலை ஆசனமாகவுள்ள திருமால். அமுதாசனத்தர்-அமுதவுணவுடைய தேவர். மலையானிலம் என்பதை மலையாநிலம் என எழுதித் தென்றலெனவுங் கூறுவர். தேர் என்றது அல்குலை. வேல் என்றது கண்ணை. மனத்தையுமெழுதுவேன் இளகாத விரும்பா யிருப்பதனால் எழுதேனென்றானென்க.

இரங்கல்.

சிலேடை-கட்டளைக்கலித்துறை.

மேலாடை தோற்றணி சங்காழி கைவிட்டு மென்சிலம்பின்
காலால் வருந்தி நிலங்கீறுங் கோலத்தைக் கண்டிருந்து
மாலால முண்டவ ரண்ணா மலையர்த மன்பர்க்கன்றி
மாலான வர்க்கிரங் காரிங்ங னேயொரு வன்கண்ணரே. (32)

மாலானவர்-திருமால், மயக்கமுண்டாகிய மாதர் என இருபொருள் கொள்க. திருமால் பன்றியவதாரமாகும்போது; ஆடைதோற்று-பீதாம்பரத்தையுமிழந்து. சங்காழிகைவிட்டு-சங்கு சக்கரத்தையு நீக்கி. எனவே மூன்றுள்ள அடையாளங்களைத் தவிர்த்தென்பது கருத்தாயிற்று. சிலம்பின் காலால்-அருணசலத்தி னடியைக்காணு மேதுவினால். நிலங்கீறுகோலத்தை-பூமியைத்தோண்டிக்கிழிக்கின்ற பன்றிவடிவத்தை என்க. இனி மாதரைக்குறிக்கும்போது-காம மயக்கத்தா லுடையையிழந்து, வளையலு மோதிரமுங் கழலக் கைவிட்டுச் சிலம்பை யணிந்திருக்கின்ற கால்விரலாற் பூமியைக்கிண்டுகின்ற கோலத்தையென்க. வருத்தமுற்ற மாதர் பூமியைக் கால்விரலாற் கிண்டிநிற்றலியல்பென்க. தலைவி தன்னைப்போல மயங்கிநின்ற மாதரையுந் தன்னோடுளப்படுத்தி மாலானவரென்றா ளென்க. தன்னைப் படர்க்கையாகவைத்துக்கூறினாளெனவுமாம்.

## நேரிசைவெண்பா.

கண்ணார்க்கும் போதருக்குங் காண்பதரிதாய்க் கண்பறித்த
திண்ணருக்கு நன்றாய்த் தெரிந்ததே—விண்ணருக்காப்
போற்றுவா ரண்ணார் புரமெரித்தா ரென்பிறவி
மாற்றுவா ரண்ணா மலை. (33)

கண்ணர்—திருமால். போதர்—பிரமர். திண்ணர்—பூர்வத்திலே திண்ண ரெனப் பெயர்பெற்றிருந்த கண்ணப்பநாயனார். அண்ணார்—பொருந்ாதவராகிய பகைவர். இதனால், அண்ணாமலையுருவம் அன்பர்க்கே தெரியுமென்பதும், அன்பி லார்க்குத் தெரியாதென்பதுங் கருத்தாயிற்று.

இரங்கல்.

## கலிவிருத்தம்.

அண்ணா மலையத் தாடற் கிரிமே
லெண்ணா மலையத் தவரெய் திலராற்
கண்ணா மலையத் தனைநீர் கலுழும்
விண்ணா மலையத் தரும்வெண் மதியே. (34)

எண்ணாமலையத்தவர்—நினையாமல் அழகிய அத்தவத்தவராகிய தலைவர். கண்ணாமலையத்தனைநீர்கலுழும்—கண்ணிலேயாகுங் கடலவ்வளவு நீரானது ஒழுகும். நாமலையத்தரும்—அச்சத்தை அலையும்படிதரும். நாம்—அச்சம். அலையவெனப் பிரியாது மலையவெனப் பிரித்து மலையும்படி எனினுமாம்.

பாங்கன் இறைவியைக் காண்டல்.

## எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மதுவானி றைந்தகுழன் மடவார்நெ ருங்கருணை
மலைமேன்ம ருநதர் வரையின்
முதுநீரில் வந்தவவ ளுடையாள மென்றிறைவர்
மொழிதலேமொ ழிந்த படியே
யிதுநாக மன்றுமுலை யிதுபூக மன்றுகளை
மிதுமேக மன்ற ளகமே
யதுநீல மன்றுவிழி யதுசாப மன்றுநுத
லதுகோப மன்ற தரமே. (35)

அவர் என்றது தலைமகளிரை. இறையவர் என்றது தலைவரை. இது, தலைவர்கூறிய அடையாளப்படி பாங்கன் தலைவியைக்கண்டு துணிந்துரைத்தானென்க.

நாரைவிடுதூது.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அருணை வெற்பினை ரயனி ருக்கவு மரிபி ழைக்கவு மாகவே
திருமி டற்றொரு கருமை வைத்தவர் திருந கிக்கய றேடியே
கருது கெட்டட லசைவ றத்துயில் கபட நித்திரை நாரைகா
ளிருக ணித்திரை யிலையெ னச்சொல விறைவர் பக்கலி லேகுமே. (36)

கருமை—உண்ட விடத்தின் கருமையென்க. கயல்—மீன். மீனைப்பற்றுதற்காக நித்திரைசெய்வதுபோற் காட்டியிருத்தலாற் கபட நித்திரையென்றான். கபடம்—வஞ்சகம்.

பாங்கி தலைவிக்குரைத்தல்.

கட்டளைக்கலித்துறை.

ஏகார் புனத்துத் தழையாற் கரிபட்ட தென்பரொன்றும்
போகாத வூர்க்கு வழிதேடு வார்புலிக் கான்முனியு
நாகா திபருந் தொழுமரு ணாசல நாட்டிளந்
தோகா யணங்கனை யாயவர்க் கேதுசொ லத்தக்கதே. (37)

தழையாற்கரிபட்டதென்பர்—கையிலேந்தியிருக்குந் தழையினால் யானையிறந்ததென்பர். போகாதவூர்க்குவழிதேடுவார்—தாம் போகப்படாத நம்மூர்க்கு வழி நம்பாற்கேட்டுத் தேடுவார். முன்சொல்வதும் பின்சொல்வதும் வேறுபட்டிருந்தமையால் எண்ணம்வேறு என்பது கருத்தாயிற்று.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சொர்க்கமெனு மொருபதவி யிருக்க மாலைத்
துளவணியு மரிபதவி யிருக்க மேலை
நற்கயிலை மலையிருக்க நினைத்தோர்க் கெல்லா
நயந்தமுத்தி நகரமொன்றே நல்கா நிற்பீர்
பொற்கையினு லுமைவணங்கிப் பரிந்து பூசை
புரிந்தவர் தெரிந்துதினம் புகழ்வோர்க் கெல்லா
மெற்குலவு புகழருணை யீச ரோரே
யினியளிக்கும் பதவிதனக் கென்செய் வீரே. (38)

நினைக்க முத்திதருந் தலத்திராதலால் நினைத்தோர்க்கு முத்திசுகாத்தைத் கொடுக்கின்றீர்: உம்மைப் பூசைபுரிந்து புகழ்வோர்க்கு அளிக்கும் பதவிக்கென் செய்வீர் என்றார். எல்—ஒளி.

சித்து.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வீரத்தை யணிமழுவா ருடைபங் காளர்
விளங்கருணைச் சித்தர்யாம் விளம்பக் கோரா
காரத்தை பொமக்கிடுகஞ் சத்தை யேகோ
கனகமெனக் காட்டிடுவோங் கரியோ ருக்குத்
தாரத்தைப் பொன்னாக வமைத்தோந் தம்பீ
தாம்பரமும் பொன்னாகச் சமைத்தோ மிந்தப்
பாரத்தை யாரறிவா ரயனு கத்தைப்
பரம்பொனிற மாகவுமே பாலித் தோமே. (39)

இக்கவி, தம்பசிக் குணவுகேட்டுவந்த சித்தர் தாஞ் செய்த சித்தின்பெருமை யை யெடுத்துக்கூறுவதாகக் கூறியது. ஆ—இது ஆச்சரியம். காரம்-பொரிகாரம். கஞ்சம்—வெண்கலம். கோகனகம்—பிரகாசமுள்ளபொன். கரியோர்—திருமால். தாரம்—தரா, வெண்கலமுமாம். தாம்பரம்—செம்பு. பாரம்—அளவு. அயனுகம்—அயலாயிருக்கின்ற நுத்தநாகம. இப்பொருட்குத் தம்பீ கேள் எனக் கூட்டி யுரைக்க. இனிச் சிலேடைவகையாக வுண்மைகூறுங்கால், ஆகாரம்—உணவு. கஞ்சம்—தாமரை. கோகனகம்—தாமரை. தாரம்—மனையாள். பொன்-இலக்குமி. பீதாம்பரம்-பொன்னுடை, பொன்-பொன், அயனுகம்-பிரமன்சரீரம். எனப் பொருளுரைக்க.

இதுவுமது.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பாதமெமக் களித்தவரு ணைச ஞர்க்கின்
பச்சிலைபொன் செய்திமையோர் பசிநோய் தீர
வோதுகடை மருந்தளித்த சித்த ரேம்யா
மொருபிடிசோ றல்லதுகூ ழுண்டோ வப்பா
மாதவர்தந் திருவாணை கரிக ளெல்லா
மாதங்க மாக்குகிற்போ மருந்தில் லாதே
யேதமற நாகமொளித் தாராவாச் செய்வோ
மிரும்பையும்பொன் னாகவுரைத் திசைவிப் போமே. (40)

சிலைபொன்செய்து—கல்லைப் பொன்னாகச்செய்து என்றும், வில்லைப் பொன்னாகிய மேருமலையாகச்செய்து என்றும் பொருள்கொள்க. கடைமருந்து—கடையிலுள்ள ஔடதம் என்றும், மந்தரமலையாற் கடையப்பட்ட அமிழ்தமென்றும் பொருள்கொள்க. கரி—இருந்தை, யானை. மாதங்கம்-பெருமையுள்ள தங்கம், யானை. நாகமொளித்தராவாச்செய்வோம்—துத்தநாகத்தை யொளியுடைய தாராவாகச் செய்வோம் என்றும், தாரா—எழுவகையுலோகத்தொன்றும்; நாகத்தை மறைத்து அராவாகச்செய்வோமென்றுங் கூறுக. நாகம்—பாம்பு. அரா—பாம்பு. இரும்பிற்குப் பொன்னென்று மொருபெயருண்மையாற் பொன்னாக எனக் கூறியதென்க. உரைத்து—உரைகல்லிலுரைத்து, சொல்லி.

நிலைவிளைப்புகழ்தல்

## எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இதழி யந்தொடைய ருணையங் கிரியி
விரத முந்திவிடு வலவனே
பதிய டைந்துமறு கினில்வ சந்தனதி
படையெ ழுந்தது பகருவேன்
புதிய கொம்புசிலை வளையி ரண்டருகு
பொழியும் வெம்பகழி போரமு
வுதய தந்தமத களிறு டன்கதலி
யுபய தண்டுவரு கின்றதே. 41)

மறுகு—வீதி. வசந்தனதிபடை—மன்மதனது மிக்கசேனை. அவன் சேனை மாதரென்க. சேனையைக்குறிக்கும்போது, கொம்பு—ஊதுகொம்பு. சிலை—வில். வளை—சங்கு. பகழி—பாணம். களிறு—யானை. கதலி—கொடி. தண்டு—தண்டாயுதம், ஆயுதமுமாம். மாதரைக்குறிக்கும்போது, கொம்பு—பூங்கொம்பு. கதலியுபயதண்டு—இரண்டுவாழைத்தண்டென்க. முறையே இடை, புருவம், கண்டம், கண், முலை, தொடைகளென்க. இக்கவி, தலைவன் தலைவி யுருவெளித்தோற்றங்கண்டு பாகனொடுகூறினனெனக் கூறியதென்க.

## ஒன்பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வரைக்கனக சாப சோண கிரிப்புனித கால கால
மதிக்குநெடு மாயர் போலவே
தரைக்குளினி யாரி யாவ ரவர்க்குமுனி வாம வீடு
தழற்சிகரி யாக வீதியோ

விரைக்கமல வோடை யாவர் புரத்தைமுனி பாண மாவர்
விரித்தகொடி யாவ ரீதலா
விரக்குமலை தோறு மேறி நடத்துமொரு தாவர் மேவி
யிடத்திலுறை தேவி யாவரே. (42)

வரைக்கனகசாப—பொன்மலையை வில்லாகவுடையவனே. இனியாரியா வர்—இனிமையுடையார் யாரிருக்கின்றார். அவர்க்கு முன்னில்லாமல்—அத்தகைய மாயருக்கு முன்னே காட்சிகொடுத்து நில்லாமல். தழற்சிகரி—அக்கினிமலை. கமலவோடையாவர்—தாமரைபூக்குந் தடாகமாயிருப்பவர்; எனறது மாயர் அவ யவமெல்லாந் தாமரைவடிவமென்பார், கண்ணாகிய தாமரைமலரைக்கொண்டு பூசித்தலால் அத்தாமரைமலர்க்கிடமாயிருத்தல்பற்றிக் கமலவோடையாவரென் றுரொன்க.

## கட்டளைக்கலித்துறை.

ஆனிட பக்கொடிச் சோணா சலனென்று மன்பர்மலர்
தானிட முத்தி தரும்பெரு மானென்றுஞ் சம்புவென்றுங்
கானிட வேடன்முன் னானிட வுண்டது கண்டுமொரு
மானிட மானவ னைத்தேவர் செய்வதென் வந்தனையே. (43)

வேடனென்றது - கண்ணப்பநாயனாரை. மானிடமானவன்—மானாகிய வுமையையிடத்தில் வைத்தவன் என்றும், மனிதனுவனென்றும் பொருள்கொள்க.

## களி.

### எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தனையிருக்கு மறைதுதிக்கு மருணை நாதன்
சரணமலர் புகழ்களியேஞ் சக்ர பூசை
வினையிருக்கு மவர்க்கெளிதோ வரிதா னையோ
விதிவசத்தால் விவரமற்ற விதஞ்செய் வேனே
புனையிருக்க நெடியகஞ்சா விருக்க வீணே
பச்சையா விலைதுயின்றான் பனையன் றேளி
யுனையிருக்கப் பணிதுயின்றான் மதுவார் தெய்வ
வாழிவிட்டுப் பாற்கடன்மீ தழுந்தி னானே. (44)

இக்கவி, களியர்கள் களிப்பாற் கள்ளின்பெருமைமுதலியன கூறுவதாகக் கூறுவது. அரி—திருமால். பனை, தேளி, அனை என்பன ஒவ்வொரு வகை மீனின்பெயர். மதுவாழி—மதுக்கடல்.

இதுவுமது.

நேரிசைவெண்பா.

ஆனூர் கொடியா ரருணை புரிக்களியேம்
வானுடை ரேனோ மதியற்றார்—மேனளிற்
சும்மாகஞ் சாவிலேயே தூளிடித்துத் தின்றாலுந்
தம்மாகஞ் சாவிலேயே தான். (45)

தம்மாகஞ்சாவிலே—தம்முடைய சரீரம் சாதலில்லை. ஏனோமதியற்றாரென் பதற்கு—மலைமுதலியவற்றால் வருந்திக் கடல்கடைந்தமுதெடுத்தாண்டு, ஏனோ மதியற்றாரென இசையெச்சமாக வருவித்துரைத்துக் கொள்க.

பிச்சியார்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தாமணிவர் திரிசூல மெதிர்கண் டார்மேற்
சக்கரத்தை விடுவர்சிவ சமயத் தாவர்
காமுகரை யாண்டுகொள்ளார் சிவநூல் கேட்பர்
கருத்தின்மா றெரிசனமே காட்டா நிற்ப
ராமையர வணிதொடையார் விடையார் வாழு
மருணகிரி வளநாட்டி லகங்க டோறுஞ்
சேமநிதி யெனவுலவும் பிச்சி யார்தந்
திருப்பெயரை வெளியாக்கித் திரிகின் றாரே. (46)

இக்கவி, சூலமுதலியவற்றைத் தாங்கி இல்லங்கடோறும் பிச்சையேற்கு மகளிரைநோக்கிக் கூறியதாகக் கூறியதென்க. பயித்தியமுடையாளைப்போலச் சொற்செயல்கள் வேறுபட்டிருப்பதனாற் பெயரை வெளியாக்கித் திரிகின்றா ரெனக் கூறினர். சக்கரமென்றது—தனத்தை. மால்—மயக்கம். ஆமை—ஆமை யோடு. சேமநிதி—வைப்புத்திரவியம்.

இதுவுமது.

மடக்கு—கட்டளைக்கலிப்பா.

தில்லை மன்றுண டம்புரி பாதனார்
தேவ ராயர் திருவரு ணைக்குளே
முல்லை மல்லிகை சண்பகம் பிச்சியார்
மொய்த்த வார்குழன் மோகனப் பிச்சியார்

நல்ல மேனியும் பொற்றிரு வேடமே
நாடி யிட்டதும் பொற்றிரு வேடமே
யில்லை யாயினு மிவ்விடை யையமே
யேற்க வந்தது மிவ்விடை யையமே. (47)

பிச்சி—பிச்சிப்பூ. ஆர்—ஆத்திப்பூ. மோகனம்—மயக்கம். பொற்றிரு வேடம்—இலக்குமியி னழகிய வேறுகோலம். இட்டதும்பொற்றிருவேடம்—அணிந்ததும் பொன்னாற்செய்த சிறப்புற்ற காதணி. இவ்விடை யையம்—இந்த விடையானது சந்தேகந்தான் என்றும், இவ்விடத்திற் பிச்சையென்றும் பொருள் கொள்க.

கார்கண்டு பாகனோடுசொல்லல்.

கட்டளைக்கலித்துறை.

அயங்காட் டியமறை யார்விடை யாள ரருணைவெற்பிற்
புயங்காட் டியமணித் தேர்வல வாமுன்பு போனகொண்டல்
சயங்காட்டிக் கோபமுஞ் சாபமுங் காட்டித் தடித்திடித்துப
பயங்காட்டி னுலஞ்சு மேதனி யேநின்ற பைங்கொடியே. (48)

அயம்—குதிரை. வெற்பில்—மலையைப்போல. சயம்—கேடு, வெற்றி. கோபம்—சினம், இந்திரகோபம். சாபம்—வில், இந்திரதனுசு. தடித்திடித்து—கனத்து முழங்கி, மின்னியிடித்து. பயம்—அச்சம், நீர். கொடிஎன்றது—தலைவியையும், பூங்கொடியையுங் குறித்ததென்க. ஆதலாற் றேரைவிரைந்துவிடு என்பதெஞ்சிநின்றதாக வுரைத்துக்கொள்க.

நேரிசைவெண்பா.

பைங்கட் புலிக்குப் பரிபவந்தைக் காட்டிநர
சிங்கத் தினையடர்த்துச் சீறியே—வெங்கைப்
புழைக்குஞ் சரமுரித்துப் போர்த்த தருணைக்கே
தழைக்குஞ் சரபமொன்று தான். (49)

பரிபவம்—அவமானம். அருணைக்கு—அருணைப்பதியில். சரபம்—சிவபிரானாகிய சரபப்பறவை.

குறம்.

பதினன்குசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒன்று மூன்று நாமு ரைக்க வந்து கேளு மரிவைமீ
ருதய மான சுவாகு நெல்லு மொற்றை பட்ட தாதலாற்
கன்று மானு மழுவு மாக வொருவர் வந்து தோன்றினர்

DR. U.V.S. IYER LIBRARY MAHAMAHOPADHYAYA BESANT NAGAR, MADRAS-90

சென்று நாடி யருணை மீது காணலாது நாமமுந்
தேவ ராய ரவர லாது தெய்வம் வேறு கண்டிலே
நின்று வாடு மிவட னாசை யிடர்த விர்ப்ப ராதலா
னீறு கொண்டு மூன்றி ரேகை நெற்றி மீதி லெழுதுமே. (50)

ஒற்றைபட்டது—எண்ணும்போது ஒன்றாகவும் மூன்றாகவும் ஒற்றைபட விருந்ததென்க. கன்றுமானுமழுவுமாக - கையிலே மான்கன்றும், மழுவாயுதமுமாக. கண்டமட்டிலே கறுப்பர் - பார்த்தவளவிலே கருநிற முடையவரென்றும், கழுத்தளவிலே நீலநிறத்தவர் (நீலகண்டர்) என்றும் பொருள்கொள்க. மூன்றி ரேகையென்றது திரிபுண்டரத்தை. எழுதல் ஈண்டு அணிதலைக் குறித்துநின்றது. இக்கவி, தலைவனை யிச்சித்து வருந்தியிருந்த தலைவிக்குக் குறத்திவந்து குறிபார்த்து நீ கருதிய தலைவனைச் சேர்வாயெனக் கூறியதாகக் கூறியதென்க. சுளகிலிட்ட நெல்லை யெண்ணலாவது நெல்லை மூன்றுகூறாக்கி யொருகூற்றை யெண்ணினால் ஒற்றைபட வருவது மிரட்டைபட வருவதுமாக வெண்ணுத லென்க. ஒற்றைபட வருவது நன்மையாகவும், இரட்டைபடவருவது அஃதின்மையாகவுங் கொள்வர். சுளகிலிட்ட நெல்லைக் கையிலள்ளிக் கீழிட்டாற் கையி லொட்டியிருக்கின்ற நெல்லை யெண்ணி ஒற்றைபடவருவது மிரட்டைபட வருவதுங் கண்டுகூறலு முண்டென்பர். இக்குறத்திய ரியல்பும், அவர் குறி கூறும் விதமும், மீனாட்சியம்மை குறம் என்னும் நூலிலே விரிவாகக் காண்க.

## பாங்கி தலைவனைவேண்டல்.

இதுவுமது.

நெற்றி மீது கண்ப டைத்த வும்மை மார னெய்வனோ
நீர ணிந்த வரவி ருக்க நெடிய தென்றன் முடுகுமோ
வெற்றி யான தாளி ருக்க மதிய மும்மை நலியுமோ
விரவு கங்கு லுமது கண்ணின் வெயிலின் முன்பு நிற்குமோ
கற்றை யான குழலி பெய்த வுதவி கொண்டு பகைவெலுங்
கருணை கூர்தெ னருணை மேவு கலியு கத்து மெய்யரே
செற்ற லார்கள் புரமெ ரித்த புழுக ணிப்ர தாபரே
தேவ ராய ரேசு கந்த தினவ சந்த ராயரே. (51)

மாரனும், தென்றலும், மதியமும், கங்குலும், ஆகிய பகையைவெல்லு முதவி நுமக்கிருப்பதுபோலத் தலைவிக்கின்மையால் நும்முதவியால் வெல்லவேண்டுமெனக் குறித்துரைத்தா ளென்க. தக்கன் மகத்திற் சந்திரனைத் தாளாற் றேய்த்தமையால் வெற்றியான தாள் என்றார். வெயில் என்றது சூரியனை.

# திருவருணைக்கலம்பகம்

## கார்காலம்.

### அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தினைப்போது தானே நினைத்தாலு மேலோர்
சிறப்பான பேறீகுவோர்
* வனத்தாடு சோணை சலத்தூடு தீரா
மயிற்பேடை காளோடைகாள்
வினைப்பாவி யானேன் விழிப்பாயு நீரான
திருத்தேறு கார்காலமே
தனித்தாவி சோர்வார் தமக்கால மேநீள்
சாற்கால மேகாலமே. (52)

முதலடி யிறுதியில், அவ்வாறுயின எனக்கென்றலைவர் ஏனோ பேறீய வில்லை யென்பது எஞ்சியதாகக் கொண்டுரைத்துக் கொள்க. ஓடை - நீர்நிலை. விழிப்பாயு நீரால் வினைப்பாவி யானேனெனக் கூட்டுக. கார்காலமே ஆல மென்க. சாற்காலமே காலமென்க. காலம் - முடிவுகாலம்.

## இளவேனில்.

### நேரிசை அகவற்பா.

காலையு மாலையுங் கைமலர் குவித்து
மாலு மயனும் வணங்குதற் கரியோ
னிமைக்குமு னுலக மியாவையும் படைத்தோன்
தனக்கொரு தாயுந் தந்தையு மில்லோன
பழவினைக் கயிற்றிற் பல்லுயிர்ப் பாவை
பழகுற நடிக்கத் திருநடம் புரிவோன்
வினைவலை யறுக்கு மெய்த்தவ வேடன்
மனவலைப் பிணிக்கு மான்மத நாதன்
பேறு மறுபத தாரு யிரமபொன்
மாறுத் தியாக வசந்தவி நோத
னண்ணு மலையா னந்நறுங் கழலங்
கண்ணு ரமுதன் கைலைப் பொருப்பின்
மறலித் திசையின் மலயா சலமென
விருத்திய தருத்திகொண் டிள்ங்கால் பரப்பிக்
காவுலைப் பல்லவக் கனை வசைப்பக்

குறைவறு குயில்வாய்க் குறட்டினி லடக்கிப்
பொறிதிக ழரிக்கரி யதனிடைச் சொரிந்து
ளிசைத்திடு மஞ்சரிப் பசைக்கோ லசைத்து
மதவீர னுக்கு வசந்தக் கருமான்
பனிமலர்ச் சாயகம் பண்ணி நீட்டினை
னின்னமும் வந்திலர் கேள்வர்
புன்னையங் சருங்குழ லன்னமென் னடையே. (53)

நடிக்க என்னுஞ் செயவெனெச்சம் புரிவோ னென்பதனோடு முடிந்தது. பஞ்சகிருத்திய நடனமானதால், "பழவினைக் கயிற்றிற் பல்லுயிர்ப் பாவை - யழகுற நடிக்கத் திருநடம் புரிவோன்" என்றார். மனவல்—மனவிருள். (ருக-ஆம்) கவியிற் புழுகணிபபிரதாபர் என்றதுபோல ஈண்டு மான்மதநாத ரென்றார். மறலித்திசை—தென்றிசை மலையாசலம் - பொதியமலை. பல்லவம்—தளிர். அளி—வண்டு. மஞ்சரி—பூங்கொத்து. வசந்தக்கருமான்—வசந்தகாலமாகிய கொல்லன். சாயகம்-பாணம அறுபத்தாறுயிரம் பொன்கொடுத்தகதை வந்துழிக் காண்க.

## மடக்கு—எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அன்னியமா சடையாரும் பின்னியமா சடையாரு
மடிமாற நடித்தாரு முடிமாற னடித்தாரு
முன்னுமற மொழிந்தாரும் பின்னுமற மொழிந்தாரு
முகைத்திடுமா னேற்றாரு மிகைத்திடுமா னேற்றாரு
மென்னகத்தா முரியாருங் கொன்னகத்தா முரியாரு
மெருக்கிதழி மணத்தாரு முருக்கிதழி மணத்தாரும்
வன்னிவடி வனத்தாருஞ் சென்னிவடி வனத்தாரும்
வருகருணைப் பதியாரும் பெருகருணைப் பதியாரே. (54)

அன்னியு மாசடையார்-அந்நியமாகிய மாசு பொருந்தார். அடிமாறநடித்தார்-(வெள்ளியம்பலத்திற்) கான்மாற நடனஞ் செய்தவர். மாறனடித்தார்—(பிட்டுக்கு மண்சுமந்தபோது) பாண்டியனு லடிக்கப் பெற்றவர். மறமொழிந்தார்—பாவ நீங்கினவர். உகைத்தல் - துள்ளுதல். ஆனேறு - இடப மெனக. மிகைத்திடு மானேற்றார்—தம்மையெதிர்த் ததிகரித்து வருமானைக் கையி லேற்றார். கொன்னகத்தாமுரியார்—கொல்லுமலையாகிய யானைத்தோலுடையார். எருக்கு-எருக்கம்பூ. இதழி—கொன்றைப்பூ. முருக்கிதழிமணத்தார்—முருக்கம்பூப்போலு மதரத்தையுடையவளாகிய வுமாதேவியை மணஞ்செய்தவர். வன்னிவடிவனத்

தார்—அக்கினியாகியவடிவத்தி லன்னமாகிய வுமாதேவியையுடையவர். சென்னி வடிவனத்தார்—சிரசிலே வடிந்த கங்கைநீருள்ளவர். கருணைப்பதியார்—கிருபைக் குத் தலைவர்.

சம்பிரதம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பாரவைபொ ருக்கெழவுங் ககனம்வ டிப்படவும்
பரிதிவ டக்கெழவு நிருதிகு ணக்குறவு
மிரவுப கற்படவும் பகலிர வொத்திடவு
மெளிதினி யற்றிடுவோ மிவைசில வித்தைகளோ
வரவம ணிப்பணியா னனலகி ரிப்பெருமா
னருணை நகர்க்கிறையா வவனித லத்திடையே
கருதிம னத்தினிலே சிறிது நினைத்தனவே
கதியைய ளித்திடுமோர் பதியுமு ணர்த்துவமே. (55)

அனலகிரி—அருணாசலம். ஓர்பதி—ஒருதலம், ஒரு கடவுள் என்றுமாம். இக்கவி, ஒருவர் தமமுடைய சாமர்த்தியம் பிறரறியக் கூறுவதாகச் சிலேடை வகையாகக் கூறியதெனக.

கருணைச் சிறப்பு.

நேரிசைவெண்பா.

உள்ளத்தின் ஞான முயர்ந்தவிடத் தன்றியிருட்
பள்ளத்தி லென்றும் படாதே—வள்ள
லருணா சலப்பெருமா னம்பிகையோர் பாகன்
கருணா சலமாங் கடல். (56)

இருள் ஈண்டு அஞ்ஞானம். கருணாசலமாங்கடல்—கிருபைவெள்ளமாகிய கடல் உலகத்துள்ள கடல்போன்றிலாமையால் இஃதோர் திப்பியக்கடலா யிருக்கின்றதென வியந்துகூறினா ரென்க.

பாண்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கங்கை வார்சடைப் பரமர்தென் னருணையிற்
கடைதொறு நீபாட
வங்கை யாழிரு செவிபுகத் தேத்துவோ
மருக்கனன் றிருநாம

மெங்கை மார்செவி பொறாக்குநின் னிசையெனு
மிடிக்குரன் மகிழ்வாரார்
மங்கை மார்செய லறிந்துகொள் பாணனே
மயிலெனப் புகழ்வாயே. (57)

இக்கவி, தலைவர்க்குப் புலவிநீக்கும் வாயிலாகவந்த பாணனை மறுத்துக் கூறுங் குறிப்புத் தோன்ற அவன் பாடலை யிழித்துத் தலைவி கூறியதாகக் கூறியது. கடை—வாசல். பாட என்றதன்பின் இடிக்குரலென வஞ்சியென வருவித் துரைக்க. இடிமுழங்கக் கேட்டவுடனே தன்பெயர் கூறுவார்மேல் இடி விழப்படாதென்று அருச்சுனன் வரம்பெற்றிருந்தா னென்று பாரதக் கதையிற் கூறியிருத்தலால், இனறும் இடிமுழக்கங் கேட்டோர் அருச்சுன நாமத்தைக் கூறுதல் உலகவழக்கமா யிருக்கின்றது என்பதறிக. எங்கைமார்— என் தங்கைமார்; தலைவர்க்கு வேறுமாதரும் உண்டென்பது குறித்தற்கு எங்கைமா ரென்றாள். மயிலெனப் புகழ்வாய் ஆதலால், நீ பாடுதல்கூடாது; மயிலென்று வாயாற் புகழ்வாயென்க.

தலைவியைப்புகழ்தல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

புடைசெறிந் தளிபாடு மிதழியந் தொடைமார்பர்
புலிபதஞ் சலிநாடுவார்
மடையிளங் கயறுவு மருணையங் கிரிமீது
மலரணங் கெனமேவுவார்
நடையுமிந் திரவேழ மிருதையிந் திரதாரு
நயனமிந் திரநீலமே
யிடையுமிந் திரசால நுதலுமிந் திரசாப
மிதழுமிந் திரகோபமே. (58)

இந்திரசாலம்—பொய் என்பது கருத்து.

உருவெளி.

கலிவிருத்தம்.

இந்திர கோபமா மிதழி பாகனர்
செந்தமி ழருணைநந் தெருஞ் செல்லுமே
சந்திர ரேகையுஞ் சமர வாளியு
மந்தர மேருவும் வளைந்து கொண்டுவே. (59)

இக்கவி, கார்கண்டு வருந் தலைவன் றலைவியுரு வெளியேகண்டு பாகனொடு கூறியதாகக் கூறிய தென்க. செல்லுமே—செல்லமாட்டாது, ஏ—எதிர்மறை. சமரம்—போர். சந்திரரேகை யென்றது நெற்றியிலிருக்கிற ரேகையை.

தலைவியை வியத்தல்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கொண்டலணி சண்டர்நிறை கங்கையணி செஞ்சடையர்
கொம்பரொரு பங்கி லுறைவா
ரண்டபகி ரண்டமள வங்கியென நின்றவதி
ருங்கழலர் தங்க ருணையீர்
கண்டுளது கொண்டன்மிசை திங்களெழு கின்றதிது
கண்டதிலை யுங்கண் முகமா
மண்டலமெ னுய்புதிய திங்கண்மிசை கொந்தளக
மஞ்சுகுடி கொண்ட வடைவே. (60)

அங்கி—அக்கினி. கண்டதிலை யென்றதனால் அற்புதமா யிருக்கின்ற தென்பது கருத்து.

நேரிசை வெண்பா.

அடுத்தமதிச் சென்னியின்மே லம்பிருக்கு மற்றோ
ரிடத்திலே நாரி யிருக்குந—தடக்கையிலே
யேந்துசிலை விட்டிருக்கு மெம்மருணை நாதனார்
போந்து புரமெரித்த போது. (61)

அம்பு—கங்கைநீர், பாணம். நாரி—பெண்ணாகிய வுமை, நாண். சிலை—வில். அம்புமுதலியன வேண்டாது சிரித்தெரித்தா ரென்பது விளங்கக் கூறினா ரென்க.

கார்காலம்.

கலித்துறை.

போதற்கு மரிதான வருணை சலத்தீசர் பொன்மேருவா
யேதப்ப டும்பாவி மனமே பிரிந்தாரி தென்னார்கொலோ
வோதத்தி னீரோடு குனலுண்டு புயன்மீள வுமிழ்தன்மைபோற்
காதற்குன் மடவார்மெய் பொன்பூசு மின்வீசு கார்காலமே. (62)

2-3474



வாய்—இடம். ஏதம்—துன்பம். ஓதம்—கடல். கனல்—கடலிலிருக்கின்ற வடவாமுகாக்கினி. புயல்—மேகம். மீளவுமிழ் தன்மைபோல் மின்வீசு கார்கால மெனக் கூட்டுக. பொன்—பசலை.

தலைவியையவேண்டல்.

கோச்சகக்கலிப்பா.

கார்வந்தா லன்னகறைக் கண்டனூர் செங்கதிரோன்
றேர்வந்தா லும்பொழில்சூழ் தென்னருணை நன்னாட்டி
லார்வந்தா லுந்தணியா தன்னமன்னீ ராளுநீ
ரீர்வந்தா லாசை நெருப்பவியுங் காணுமே. (63)

கறை—விடம். தேர்வந்து—தேர்வர. ஆலும்—அசையும். இக்கவியில், தலைவன் பாங்கியை வேண்டலாகவும் பொருள் கூறுவர்.

பனிக்காலம்.

கலித்துறை.

காணம்ப ரநதோலி னுடையாள ரருணேசர் கைலாசமேற்
றாணங்க ணிகர்தோள ருறைகின்ற நகரூடு சொரியாதரோ
பூணங்கை வளைசிந்த மடவார் மனத்தேறு புகைபோலவேள்
பாணங்க ளுதிர்கின்ற துகள்போல வுறைகால் பனிக்காலமே. (64)

அம்பரம்—திக்கு. தோளரென்றது—தலைவரை. புகை—காமாக்கினியாலாகிய புகை. துகள்—பராகம். உறை—துளி.

நேரிசைவெண்பா.

பண்ணிறந்த வாசவரிற் பல்கோடி மாண்டாலு
மெண்ணிறந்த வேத ரிறந்தாலுங்—கண்ணாற்
கமைத்தவெலா மாண்டாலு மண்ணு மலையார்க்
கிமைப்பளவுங் கால மிலை. (65)

பண்ணிறந்த—அலங்காரமிகுந்த. அமைத்தவெலாம்—அமைத்த காலமெல்லாம். காலாதீதராதலால் இமைப்பளவுங் காலமிலை யென்றாரென்க.

தலைவனைவேண்டல்.

ஒன்பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இலகொளி பரந்து மாரன் விடுகணை துரந்து நாடி
யிடுமிரு நெடுங்கண் மாதரார்
விலகரிய கொங்கை மீது பழம்பழி வந்து பாவின்
விழுவதென வந்து சேர்கிலீர்

மலகரி குறிஞ்சி தேசி பைரவி சுரும்பு பாடும்
வயலருணை மங்கை பாகரே
பலமலர் கதம்பதூளி மிருகமத சுகந்தம் வீசு
பரிமள வசந்த ராசரே. (66)

தூர்ந்து—செலுத்தி. 'பழநழுவிப் பாலில் விழுவதுபோல' என்பது பழமொழி. இது இலேசாகச் சேர்வது குறித்துக் கூறியதென்க. கதம்பதூளி—வாசனைப்பொடி. மிருகமதம்—கஸ்தூரி. சுகந்தம்—சந்தனமுமாம். அருணைநாதருக்குப் பரிமளவசந்தராச ரென்றும், வசந்தராச ரென்றும் பலகவியிலுங் கூறுவது காண்க.

மதங்கு.

ஒன்பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வசிகரம் வயங்கு நீறு மபிநய புயங்க ராச
வலயமு மணிந்த தோளினு
ரசலகுல மங்கை பாகர் பரிமள வசந்த ராச
ரருணையின் வளங்கள் பாடியே
யிசைபெற வரங்கி லாடு பவுரிகொண் மதங்கி யார்த
மிலகிளர் கொங்கை யானையே
திசைபெற விருந்த யானை பிறகிட முனிந்து போர்செய்
திறலிப மனந்த மானவே. (67)

அபிநயம்—கூத்து. அபி—உபசாக்கமுமாம். புயங்கம்—பாம்பு. அசலம்—மலை. அரங்கு—சபை. பவுரி—கூத்துவிகற்பம். திசையின் அந்தத்திற் மலையைவைத்துத் தாங்கிநிற்பதாகக்கொண்டு பிறகிட என்றார். இபம்—யானை.

இதுவுமது.

மடக்கு—கட்டளைக்கலிப்பா.

மதியைச் சூடதி ருங்கழ லுதனார்
நம்ப னாரரு ணைபுரி வீதமேல
சதியிற் பாடிந டிக்கும தங்கியார்
தந்த வாசைத ரிக்கும தங்கியார்
வதனத் தும்பிச்சி மண்டல மாறுமே
வந்தி ருக்கவிம் மண்டல மாறுமே
கதியிற் கொண்டது மந்தக் காணமே
கண்ட பேர்க்கிலை யந்தக் காணமே. (68)

சதி—தாளவொத்து. தரிக்குமதங்கியார்—அங்கே யாவர் தாங்கத்தருமது. சசிமண்டலமாறும்—நிகரில்லாமையாற் சந்திரமண்டலந் தன்னிலையி னீங்குமென்க; குறையு மென்பது கருத்து. இம்மண்டலம்—இவ்வுலகம். ஆறுமே—தணியுமே; காமச்சூடு தணியாதென்பது கருத்து. கதி—நடை. கரணம்—கூத்தின் விகற்பம்.

குறம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அருணமணி முலைக்கிரிமேற் செங்கை வைத்தா
யாகையா லருணகிரி யன்பன் மூதூர்
வருணமுலை கண்ணாரப் பார்த்தா யுன்றன்
மகிழ்நனுங்கண் ணாரமுதன் வந்து கேளாய்
தரணியிலுன் றனைச்சேர்வன் முருகன் போலத்
தநயரையும் பெறுவையிவை தப்பு மாயின்
றிருநிறைவண் டார்குழலாய் குறமும் பாடேன்
சிறந்தகுறக் கூடையும்யான் றீண்டி லேனே. (69)

குறத்தி நெற்குறிபார்த்துக் கூறுவதன்றித் தொடு மிடமுதலியவற்றை யறிந்து குறிசொல்வது முண்டெனவறிக.

மறம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தீண்டரிய மடற்பனையின் சருகை வாரிச்
சிற்றிரும்பாற் சுற்றிவரச் செருக்கிக் கூட்டி
நீண்டதுவுஞ் சுருண்டதுமா வரைந்து சுற்றி
நிருபமெனக் கொடுத்தெதிரே நிற்குந் தூதா
தாண்டவமா டும்பரனு ரருணை நாட்டிற்
றருமறப்பெண் டனைவேண்டிச் சமரிற் போந்து
மாண்டவரே றியகோணல் வளைக ளாங்கள்
வருங்கல்வழி வாயினடு மரங்க டாமே. (70)

ஓலையைச் சருகென்றும், எழுத்தாணியைச் சிற்றிரும்பென்று மிழித்துக் கூறிய தறிக. நிருபம் என்றது அரசன்விடுத்த திருமுகத்தை. "சமரிற் போந்து மாண்டவ ரேறிய கோணல்வளைகள் வாயிலிடு மரங்களாம்—யுத்தத்தில்

வந்திறந்தவர் தங்கியிருக்கிற கோணல்வளைதடிகள் வாயிலிலே நட்டியிருக்கு மாங்களாம். அஃது தறிந்துகொள் என்பது எஞ்சி நின்றது. வீர ரிறந்தவிடத்திற் கல் நாட்டுவதுபோல வளைதடியையு நாட்டுவ துண்டென்பதிதனு லறிக. கல்—பாறகல். இக்கவி, அரசன் மறக்குலப் பெண்ணைவேண்டி அவர்பாற் றிருமுகம் வரைந்து விடுப்ப அதைக்கொணர்ந்த தூதனைநோக்கித் திருமுகத்தை யிழித்துத் தங்குலத்தினர் வீரத்தைத் தெரியக்கூறி விடுத்தலாக வுரைத்த தென்க. பெரியோர் வரைந்துவிடுக்கு மோலைச்சுருளைத் திருமுகமென மங்கலமாகக் கூறன் மரபென்க.

## மடக்கு—கலிவிருத்தம்.

மறைக்க வனப்பரி யாரும் வரைக்க வனப்பரி யாரு
மெறித்த விரும்பிறை யாரு மெவரும் விரும்பிறை யாரும்
பொறுத்த சினவிடை யாரும் பொருந்து சினவிடை யாரு
மறத்த வளம்பதி யாரு மருணை வளம்பதி யாரே. (71)

மறைக்கவனப்பரியார்—வேகமுடைய வேதக் குதிரையார். வரைக்கவனப் பரியார்—அளவுசெய்யவரியவழகுள்ளவர். இரும்பிறை—பெரிய பிறைச்சந்திரன். இறையார்—தலைவா. சினவிடையார்—சிறிய இடையையுடைய வுமாதேவியையுடையவர். அறத்தவளம்பதியார்—அறம் வளர்த்தவளாகிய வுமாதேவிக்கு அழகியநாயகர்,

## கலித்துறை.

ஆரணி துங்க னாரணி பங்க னருணேசன்
றாரணி யஞ்சுங் காரண கஞ்சந் தரியானல்
வாரண ரெங்கே சாரண ரெங்கே மலர்மேவும்
பூரண ரெங்கே நாரண ரெங்கே போவாரே. (72)

நாரணி—நாராயணி, உமாதேவி யென்க. வாரணர்—யானையையுடைய இந்திரர், சாரணர்—பதினெண்கணத்தரு ளொருகணத்தராகிய ஆகாயவாசிகள்,

## தழை.

## கட்டளைக்கலிப்பா.

போர்த்த போதக நல்லுரி யாடையார்
போர்வை யாளர் புகழரு ணைக்குளே
யீர்த்த சூத கறுந்தழை யையனே
யெங்கண் மாத ரெடுத்து மகிழ்ச்சியாய்

மோந்த போது துவண்டது மெய்யிலே
மொய்த்த போது புலர்ந்தது கண்ணினீர்
பாய்ந்த போது கனைந்தது மீளவும்
பார்த்த போது பசந்து மலர்ந்ததே. (73)

போதகம்—யானை. உரி—தோல். சூதம்—மாமரம். காமவெப்பத் துயிர்ப் பாற் றுவண்டதென்றும், புலர்ந்ததென்றுங் கொள்க. மாதராலே மலரும் மரங்கள் பத்திலொன்றாகிய மாமரம் பார்த்தால் மலர்வதாற் பார்த்தபோது மலர்ந்த தென்றாள். இக்கவி, தலைவி தழைவிருப்புற்றதைத் தோழி தலைவன்பாற் கூறிய தாகக் கூறியதென்க.

இரங்கல்.

மடக்கு—எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மலரித ழித்தொடையான் மதியணி வித்தகனார்
மலைமக ளற்புதனார் வயலரு ணைப்பதிசூழ்
குலவுமி டக்கழியே பலவுமி டக்கழியே
குறவையி னக்கயலே யுறவுமெ னக்கயலே
சலமிகு முற்பலமே தளர்வது முற்பலமே
சருவும னத்திடரே தழுவும னத்திடரே
யிலைநெரி சற்பனையே யிவருரை சற்பனையே
யினியப னித்திரையே யினியிலை நித்திரையே. (74)

பால்—வெண்மை. இடக்கழி - உப்பங்கழியிடம். பலவுமிடக்கழி - எல்லாங் குதர்க்கந் தருகின்ற அழிவு. குறவை - ஓர்வகை மீன். சருவுமனத் திடர்—மருவு கின்ற அன்னந்தங்கிய திடர். சற்பனை - நல்ல பனை. இவருரை சற்பனை— இத்தலைவருரை வஞ்சனை. பனி - குளிர்ச்சி.

கூவடுகண்டிரங்கல்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நித்த னம்பனரு ணைசலத் திருவை
நின்று தேடியுழ னெஞ்சமே
யித்த டஞ்சுர மடங்கலோ விதல
தில்லை வேறுமா மிதனிடை

யத்தி நின்றவிட மவ்விடஞ் சிலைகொ
ளரசு நின்றவிட மூவ்விட
மெய்த்து ளஞ்சியிள வஞ்சி நின்றவிட
மிவ்வி டஞ்சுவடு மேவுமே. (75)

இத்தடம்—இவ்வழியில், சுரம்-சுரத்தின் வெப்பம். அத்தி—அத்திமரம். அத்திநின்ற இடமாகிய அவ்விடத்தி லென்க. சிலைகொளரசு என்றது தலைவனை. வஞ்சி—தலைவியை, சுவடு—அடிச்சுவடு. சுவடுகண் டிரங்கல் என்பது தேடிச்சென்ற செவிலி தலைவன் றலைவி காலழுந்தப்பட்டக் குறியைக்கண் டிரங்க லென்க.

மடல்விலக்கு.

கலிவிருத்தம்.

ஏறுடை யண்ணலா ரேழை பாகனு
ராறணி சென்னியா ரருணை வெற்பரோ
கூறொரு பெண்ணையே கூட வேண்டுவார்
வேறொரு பெண்ணையே வெட்டு வார்கொலோ. (76)

பெண்ணை—பனை. வெட்டுவார்கொலோ-வெட்டார். கொல்-அசை. ஓ-எதிர்மறை. வெட்டிற் பாவமுண்டா மென்பது கருத்தாகக் கூறி விலக்கினு ளென்க. இக்கவி, தலைவன் பாங்கியைநோக்கி மடலேறுவ னென்றபோது அது கூடா தெனத் தோழிவிலக்காகக் கூறியதென்க. மடலேறுதலென்றது, தலைவன் தலைவியைச் சேரவேண்டி, நீறுபூசி யெருக்கம்பூமாலை முதலியவற்றை யணிந்து தலைவிபடத்தைக் கையில்வைத்துப் பனங்கருக்காற் செய்த குதிரைமீ தேறுதல்; இவ்வாறு ஏறிவந்தவனுக்குக் கருதியபெண்ணைக் கொடுத்தன் மரபு. இதன் விவரத்தைத் தஞ்சைவாணன்கோவை (௧௦௪-வது) செய்யுளுரையிற் காண்க.

தவம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வாய்ந்தநல மருந்தருந்தி யரிய யோக
வகைபுரிந்து வாயுவுள்ளே யடக்கி னாலுங்
காய்ந்தவிறுப் பூசியிலே தவஞ்செய் தாலுங்
காயம்வருந் தீங்கிவதல்லாற் கதிவே றுண்டோ

வாய்ந்ததிரு நீறணிந்தைந் தெழுத்தை யோதி
யகமகிழ்ந்து சிவாகமத்தி னடைவை யோர்ந்தே
யேய்ந்தருணா சலத்தைவலங் கொண்டா ரன்றோ
விமைக்குமுன்னே கைலைமலை யிடங்கொண் டாரே. (77)

இக்கவி, தவஞ்செய்வாரை நோக்கி இவ்வாறு செய்வீர் நீர் செய்யுந் தவமானது அவமா மெனக் கூறிய தென்க.

மாலையிரங்கல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இலங்கிய திங்க ளெழுந்தா லெங்கண் மின்வெங் கதிரென்பாள்
கலங்கின ளாயினு மன்னாள் கட்கம லங்குவி யாவோ
துலங்கிய வெங்கதிர் தானேயுஞ் சோண கிரிப்பெரு மானே
யலங்கலை யென்று கொடுப்பா யன்றது வெண்மதி யாமே. (78)

கட்கமலம்—கள்ளையுடைய தாமரை யென்றும், கண்ணாகிய தாமரை யென்று மிருபொருள் கொள்க. கட்கமலங்குவியா என்றது நித்திரை யின்மையைக் குறித்தது. அது - அத்திங்கள்.

நேரிசைவெண்பா.

ஆற்றுங்காற் கஞ்சத் தவர்தா மரைக்கண்ணர்
சாற்றுங்காற் கண்ணரவர் தந்தையார்—சிற்றுமதி
சூடும் பெருமானைச் சோணகிரி வித்தகனைத்
தேடிவதிங் கெப்படியோ சேர்ந்து. (79)

ஆற்றுங்காற் கஞ்சத்தவர்—தாங்குமிடமாகிய தாமரையையுடையவராகிய பிரமர். கால்-இடம். தாமரைக்கண்ணர்—திருமால்; காற்கண்ணரவர்—காலின்கட் சிலம்புடையவர். அரவம்—சிலம்பு. அன்றிக் காற்றை யுணவாகக் கண்ணுகின்ற அரவினை யணிந்தவ ரென்றுமாம். கண்ணல்—கருதல். தந்தை யார்? அவருடைய பிதா யாரோ? என்க.

கட்டளைக்கலித்துறை.

சேணார் திருவுடைச் செல்வரைக் காணிற் சிறப்புச்செய்து
பேணா தவரு முண்டோ புவிமீதிற் பெருத்தெழுந்து
சோணா சலவடி வாய்வெளி யாய்நின்ற சோதிதனைக்
காணாத கண்ணனைச் சொல்வர்செந் தாமரைக் கண்ணனென்றே. (80)

திரு என்பதற்கு இலகுமி என்றும், சிறப்பென்றும் பொருள் கொள்க. காணாத கண் என்பதற்குப் பார்க்காத கண்ணென்றும், குருட்டுக்கண்ணென்றும் பொருள்கொள்க.

நேரிசைவெண்பா.

என்றுமதிக் கண்ணா ரிறைவரரு ணாபுரியி
னின்றுதவம் புரியாய் நெஞ்சமே—பொன்றிரளான்
மாதரையா னாயிழைசூழ் மாதரையா னீதுவண்டு
மாதரையா னாமையென்சொல் வாய். (81)

மாதரையால்—பெரிய மண்ணினாலும். இழை—ஆபரணம். மாதரையால்—மாதருடைய அழகாலும், மாதரை—ஆசையை. ஆறாமை—நீங்காமை.

இடைச்சியார்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சொல்லாடி னுமக்கிரண்டு பசுவே புண்டு
சுமந்திடுபாற் கலசமுமத் துணையா மீது
மல்லாமி லிடையின்மிக விளைத்துப் போனீ
ராயிருந்து மிடைமதியோ வகந்தை தானோ
புல்லாரென் பணித்தொடையா ரருணை நாட்டிற்
பொதுவர்குல மங்கையரே புவிமேற் கண்டோ
மெல்லாருந் தனித்தனியே டெடுத்தக் காலு
மிரண்டுமுறை யாமலகன் றேகுவீரே. (82)

இரண்டு பசு—இரண்டு ஆக்கள், ஆன்மா விரண்டு; அவை சீவான்மா பரமான்மா வென்க. பாற்கலசமு மத்துணை என்றதற்குத் தனமு மிரண்டெனவும் பொருளாம். புல்லாரென்பு—அறுகம்புல்லும் ஆத்திப்பூவும் எலும்பு மென்க. எடெடுத்தக்காலும்—நீர், கொண்டுவந்த தயிரிலே ஏடாகிய ஆடையை யெடுத்துக் கொண்டு போனபோதும். இரண்டும்—எடுத்துக்கொள்ளுங்க ளென்றுவது எடுக்கவேண்டா வென்றுவது இரண்டுவகையு மென்க.

மதுவுமது.

கட்டளைக்கலித்துறை.

வீரனை நல்கி மகமூறு செய்த விடைக்கொடியார்
காரணி கண்ட ரருணா சலத்திற் கலசங்கொண்டு
மோரது கூறு மிடையினை மானுக்கு மூண்டகம்போ
லீரடி மெல்லினம் வல்லின மாகு மிருதனமே. (83)

வீரன்—வீரபத்திரன். மகம்—யாகம். வல்—சூதாடுகருவி. இக்கவியில் வல்லினம், மெல்லினம், இடையினம், வரப்பாடியது காண்க.

தலைவி யிளமைத்தன்மை பாங்கி தலைவர்க்குணர்த்தல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தடனாக மணிவெயிலும் பிறையுமிழு நிலவுமெதிர்
சடில நாத
னடனாக நெடுஞ்சிலையா னசுரர்புர மெரித்தபிரா
னருணை நாட்டிற்
றிடனாக மனையவரே தனஞ்சிறிதுங் காணாத
சிறியார் தம்மைக்
கடனாக நீர்வினவிப் பிணைதேடி முறிதனையேன்
கைக்கொண் டீரே. (84)

எதிர்—பகைத் தெதிர்க்கின்ற. நாகமனையவரே—யானையனைய தலைவரே. தனஞ்சிறிது காணாத சிறியார்தம்மை—முலைசிறிதுந் தோன்றப்பெறாத சிறியராகிய மகளிரை. கடனாக-நீர் கூடுமுறையாக. பிணைதேடி—மான்வந்ததோ எனக் கூறித் தேடி. முறிதனை—தழையை. இனிச் சிலேடைவகைக்குத் தனம்—பொருள். கடன்-வட்டிக்குவாங்கிய கடன். பிணை—பதிலாகக்கொள்வது. முறி—எழுதிக்கொடுத்த ஓலைமுறி.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கையடைந்த மழுமானுஞ் செழுமானு முழைமானுங்
கயலு மானு
மையடைந்த விழிமானு முடனாக வருணேசர்
வருகு வாரே
மெய்யடைந்த நிறங்கருகி விழிகளும்பஞ் சடைந்துவா
யிடற்றி னாடே
யையடைந்து படர்ந்துவர யமனடர்ந்து தொடர்ந்துவரு
மன்று தானே (85)

செழுமானும்—செழிப்புற்றிருக்கும் இடபமும். உழைமான்—உழை யென்கிற மானும். மையடர்ந்த விழிமான்—உமாதேவி. ஐ—கபம்.

தலைவன் சொல்லல்.

நேரிசைவெண்பா.

அண்ணு மலையா ரருணையன்னை யீருமைக்
கண்ணுலஞ் செய்தான் கமலத்தோ—னெண்ணு
திணைக்கோலஞ் செய்தமுலை யேந்திழையீ ரெனனை
மணக்கோலஞ் செய்தான் மதன். (86)

கண்ணுலஞ்செய்தான்-கல்யாணஞ்செய்தான். கல்யாண மென்பதற்குக் கண்ணுல மெனக்கூறுவது வடதேச வழக்கு. உம்மைக் கண்ணுலஞ்செய்தான்-உம்முடைய கண்ணை விடமாகச் செய்தான் என்க. மணக்கோலஞ்செய்தான் - கலியாணக்கோலஞ் செய்தானென்றும், வாசனையுடைய புட்பபாண மைஞ்சு மெய்தானென்றும் பொருள் கொள்க. தன் வருத்தமிகுதியால் ஐந்துபாணமு மெய்தா னெனக் கூறினு னென்க.

கொற்றியார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மழலைமொழி யிசையாலுங் கொடும்பார்வை யதனாலு
மயக்க மாகிச்
சுழலும்விட ரவமெலாம் படமெடுத்து முன்னுடைத்
தோன்றி னீரே
யழலுருவ மணிகாந்த ரருணகிரி வளநாட்டி
லளிவந் தூதுங்
குழலொருசற் றுண்டாயி னெப்படியோ வாட்டிடுவீர்
கொற்றி யாரே. (87)

விடர் - மலைப்பிளப்பு. அளிவந்தூதுங்குழல் - அன்புவந் தூதப்படுங் குழலென்றும், வண்டுகள் வந்திருந் தூதப்படுங் கூந்தலென்று மிருபொருள் கொள்க. சற்று - சிறிது. இக்கவி, தலை முண்டிதஞ்செய்து திருநாமந் துளசியை யணிந்து குலமுதலியதாங்கிப் பாடி யாடித்திரியு மகளிரைநோக்கி நகரிலுள்ளார் கூறிய தாகக் கூறிய தென்க. இம்மகளிர் பாம்பாட்டிவேது முண்டென்பது தெரி கின்றது. கொற்றியென்னும் பெயருள்ள துர்க்கையைப்போல் இவட்குஞ் சூல முதலியன வுண்மையால் இக்கொற்றியென்னும்பெயர் வழங்கலாயினது போலும்.

இதுவுமது

கோச்சகக்கலிப்பா.

ஆரிதழி சூடு மருணேசர் நன்னாட்டில்
வாரிருகு கொங்கை மலைசுமக்கு் கொம்பீரே
பேரிருளபோ ஞமப் பிறைநிலவு கண்டொளிக்கக்
கூரியகண் ணில்லார் குழல்குறைந்தா ரென்பாரே. (88)

இருள்போல்—இருளைப்போல நாமம்—புகழையுடைய பிறைநிலவுகண்டொளிக்க—நீ ரணிந்திருக்கிற அணியாய பிறையி னிலவைக்கண்டு உம்முடைய கூந்தன் மறைந்திருக்க; அதனையறியா தென்பரு என்றியதெனக.

வஞ்சித்துறை.

பாணூர் மொழிநிறை பேணு தவனுறு
சோணு சலாபு மாணு நாகமே. (89)

உறும்—அடைவன். இது செய்யுமென்னு முற்றுச்சொல்

வஞ்சிவிருத்தம்.

நாக வாதையில் வன்பிறார்
தாணி மீதொரு கொன்பெறா
சாரு வே ாகமு மின்புறு
ாருணை நாயக ரன்பரார். (90)

வாதையில் வன்பிறா—வாதையில்லாத வன்மைகெடமாட்டார். கொன்—அச்சம்.

வேற்றொலிவெண்டுறை.

அருணையதி ருங்கழல ராறணிசெஞ் சடையாள ரிவை பாகர்
கருணைநெடுங் கடலான பெருமானார் தாடொழுதார் கதியை நாடின்
மாணமிலா விமையவர்தம் வானுலக மன்றே
பொருணிறையு நான்மறையோர் புகலுமத் தாட்பூவே. (91)

தாட்பூ—திருவடித்தாமரையாம்; அதனையடைதலே சாயுச்சிய மென்க.

இரங்கல்.

கலித்துறை.

பூவுண்ட விடையாள ரருணு சலத்தீசர் பொன்மேருவாய்ப்
பூவுண்ட புகழாளர் பிரியே னெனச்சொன்ன பருவத்திலே

காவுண்டு குயிலுண்டு மயிலுண்டு கிளியுண்டு கனிதூவுதே
மாவுண்டு குருகுண்டு திருகுண்ட மனனுண்டு மறவாமலே. (92)

வாய்—இடம். கா—சோலை. சோலை முதலியன சான்றாக வுண்டெனக் கூறினு ளென்க.

வெறிவிலக்கு.

கலிவிருத்தம்.

வாங்குவில் லேர்நுதல் வயங்கு மாதரீ
ரீங்கிவ ளொருவர்கை யேட்டை வாங்கினா
ளாங்கடி வணிந்தவ ணருணை நாட்டிலே
நீங்கள்மை யழிப்பது நீதி யல்லவே. (93)

இங்கவி, தலைவியுற்ற நோய்தீர்க்க வேலற்கு ஆடுவெட்டச் செவிலி முதலோர் கருதியவழித் தோழி கூடியதனை விலக்கலாகக் கூறியது. இவள்—இத்தலைவி. ஒருவர் கையேட்டை வாங்கினாள்—ஒரு தலைவரிடத்தி லாசை கொண்டாள். ஏட்டை—ஆசை. மையழிப்பது—ஆட்டைக் கொல்வது. இவள் ஒருவர் கையிலிருந்த ஓலைச்சுவடியை வாங்கினாள், நீங்கள் அவ்வேட்டிலிட்ட மையை யழித்துவிடுவது எனச் சிலேடையாகவும் பொருள்படும்.

தலைவியைப்புகழ்தல்.

கட்டளைக்கலித்துறை.

அள்ளற் கடல்விட நீங்கா தகண்ட வருணைவெற்பிற்
பிள்ளைப் பிறையுஞ் சிலையுமொப் பாநுதற் பேதைநல்லாள்
வள்ளைக் குழைபொரு கண்ணுக்குத் தோற்றம்பும் வாரிதியுங்
கள்ளக் கயலு மிராசியின் மீனுங் கடைப்பட்டதே. (94)

அள்ளல்—சேறு. வள்ளைக்குழை—வள்ளைக்கொடியையொத்தகாது, அம்பு தச்சன் கருவியாற் கடையப்பட்டதென்றும், வாரிதி மந்தரத்தாற் கடையப்பட்டதென்றும், கயல் விற்பதற்காகக் கடையினிடத்திற் கிடக்கிறதென்றும், மீனம்—இராசிகளி னிறுதிப்பட்டதென்றும் பொருள்கொள்க.

வலைச்சியார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தேவியிட மகலாத வருணகிரி வளநாட்டிற்
றெருக்க டோறு
மாவிரத முனிவரெலா மயல்கூரக் கயல்கூறும்
வலைச்சி யாரே
காவிதிகழ் வாவியிலே மீன்பிடித்து வருவோரைக்
கண்டோங் கண்டோ
மாவியெலாம் பிடித்திழுக்கு முறைமைப்போல வொருவரைக்கண்
டறிந்தி லோமே. (95)

கயல்கூறும்—மீன்விற்கும். காவி—குவளை. இக்கவி, வலைஞோளிட்டு மீன் விற்குமகளிரைநோக்கி யூரிற் சிலர் கூறுவதாகக் கூறியதென்க.

இதுவுமது.

நேரிசை வெண்பா.

மேலா றணிசடை யார் வீற் றருணை வீதியிலே
மாலாக வந்த மடமானே சியரோ—காலா
லிருவரா னுங்காட்டு மெயாண்பிடிக்கக் காத
லொருவரா னுங்கிடு மோ. (96)

காலாமிருவராலும்—வாய்க்காலிலுள்ளோடாகிய இரண்டு வரான் மீனையும் என்றும், காலாகிய இரண்டு வராலையுமென விருபொருளுங் கொள்க. காலிற்கு வரான்மீனை யுவமானமாகச் சிறப்பித்துக் கூறுவதுண்டு. இரண்டுருவகமாக வுரைத்தாரென்க.

செவிலி நற்றாயைத் தேற்றல்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒருவ ராலு மறுகாத காளையுயிரி னுமொரு கோவை யசையான்
மருவி னாலுமென தாது காளையே வழிக டோறுமினி நாடி மீளவே
கருணை நீதிமனை பேணு மாதுடன் கடல்க ளேழுமலை யேழு மேழுமா
வருணர் சூழு முலகேழு மேழுமா வருணை நாதர்சர பாவ தாரமே. (97)

கருணைநீதி மனைபேணுமாதுடன்—தலைவன் மணந்து தலைவியுடனே கருணையாலு நீதியாலு மனையறம்பேணி யிருப்பான் ஆதலாற் சென்றதற் கிரங்கி யென்பயன் என வருவித்துரைக்க. சரபாவதாரமே என்பதற்குச் சரபமாகிய இருதலைப்பறவைபோ லியைந்து பிரியாதிருப்பார்க ளென்க. கடல்களேழு—உவர்முதலியன; (கஉ-வது) நிகண்டி லறிக. மலையேழு—இமைய முதலியன. (கஉ-வது) நிகண்டி லறிக. வேறுகூறுவது முண்டு. ஏழுமாவருணர்—சூரியர். ஆவருணைநாதர்—ஆகிய அருணைப்பதியிறைவர்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தாரிலங்கு மறைமுடிவி னடித்தருளு மருணேசர் தமது நாட்டி
னூரியர்மேன் மனமகிழு மளியினங்கா ளொருவார்த்தை நவிலக் கேளீ
ரேரிருக்குங் கைதையெலாஞ் சோறிருக்க நீரிருக்கு மிடங்க டோறும்
வேரிமலர்த் தேனிருக்க விவர்கூழை விரும்பி வந்தேன் விழுகின்றீரே.

அளியினம்—வண்டுக்கூட்டம். கைதை—தாழை. சோறு என்பது பூவிலுள்ள பராகத்திரளை. இவர்கூழை—இத்தலைவி கூந்தல்.

MAHAMAHOPADHYAYA DR. U.V.S. IYER LIBRARY BESANT NAGAR, MADRAS-90

23474
4926



போது கூழை யேன் விரும்பினீர்; வேண்டாவென விலக்கியவர்களுக் கிடைகூறிய தறிக. இக்கவி, தலைவன் தலைவியைத் தீண்டுவதற் குபாயங்கருதி அவள் கூந்தலி லிருக்கின்ற வண்டுகளை நோக்கி யிவள்சிற்றிடை பாரம்பொறாது ஒடிந்துவிடும் ஆதலால், நீங்கள் விலகிப்போக வேண்டுமெனக் கூறித் தலைவி மருங் கணைதலாகக் கூறியதென்க. இதனை மெய்தொட்டுப்பயிறல் என்றும், வண்டோச்சி மருங்கணைதலென்றுந் துறை கூறுவா.

பாங்கிதலைமகளவயவத்தருமைசாற்றல்.

## அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஏமநெடுஞ் சிலைவளைத்த பெருமானை யருணகிரி யிறைவனை நாட்டிற
றாமரைமண் டபத்துறையு மடந்தையிடை பொறுமெனவொன் றுறுதமிவனையே
பாமுயறகெம் பிணிநீலெறி விசுபாயலநாய் பரிந்து புனமை வடிவிலாதோ
னைமயமபிாச் சயி வகொடு தொநிந்நரிந புழு மமயி ழ நருமை யாமே.

எமம்—பொன். இக்கவியிற் சூழ்ந்த தலைவனைச் சேர்க்கும் பிரிந்தவ அவயவங்களையெல்லா மெழுதினாலு மிடையை யெழுதமுடியா தென முயறகொம்பு முதலியன வெடுத்துக் கூறினாளெனக.

இறைவரி கையுறையேற்றமை பாங்கி யிறைவர்க்குரைத்தல்

## கட்டளைக்கலிப்பா.

ஆர்வ லர்க்கழி யாவர மருளுவா
ரத்த னாரரு ணைபுரி வெற்பனே
பார்வி யப்புற நீதரு மாமணி
பட்ட பாடு பகர்ந்திட லாகுமோ
கார்கு ழற்கு முடிமணி யாயிரு
கண்கண் மீது கண்மணி யாய்முலை
சேர்த லுற்ற பொழுதிரு குன்றிலுஞ்
சென்று லாவுந் தினமணி யானதே. (100)

ஆர்வலர்—அன்பர். தருமாமணி—கையுறையாகத் தந்த பெருமை பொருந்திய மணி. மணியை விருப்பி முடியிலுங் கண்ணிலு முலையிலும் வைத்தாள் என்னுங் குறிப்புத்தோன்ற வுரைத்தமை கொள்க. தினமணி—சூரியன்.

திருவருணைக்கலம்பகம்

முற்றிற்று.